உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே'


| மலர் க. | பிரபவஞு மார்கழிமீ — 1928ஞு ஜனவரிமீ | இதழ் க. |
|---|---|---|


உள்ளுறை — பக்கம்


எமது பத்திரிகை ... ... ... 1
சித்தாந்தம் ... ... ... ... 3
சைவ சாரம் ... ... ... ... ... 7
" ஒட்டிட்ட பண்பு " ... ... ...
சைவ சித்தாந்தமும் மேல்நாட்டு அறிவியல் நூல்களும் ...
ஆன்ம வாழ்க்கையும் புலால் மறுத்தலும் ... ...
திருப்பணி வேலையில் விளையுஞ் சில தீங்குகள் ...



REGISTRAR OF BOOKS ✱ MADRAS ✱
N1928



பத்திராசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்,

ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உதவிப் பத்திராசிரியர்

வித்துவான்

பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்



சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,

92, வரதா முத்தியப்பன் தெரு,

சென்னை.

1928

## ‘சித்தாந்தம்’ நடைபெறுவதற்கு ஓராண்டு வரையில் பொருள் உபகரிக்க ஒப்புக்கொண்ட உத்தமர்கள்.

1. ஸ்ரீ ஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர்.
2. திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார், காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம்.
3. திரு. எஸ். கனகசபாபதிப் பிள்ளை, திரிசிராப்பள்ளி.
4. திரு. வ. சோமசுந்தரம் செட்டியார், ‘ருக்மணி குக்கர் கம்பெனி,’ சென்னை.
5. திரு. ம. சி. சோமசுந்தர முதலியார், திருமயிலாப்பூர், சென்னை.
6. திரு. ப. தானப்ப முதலியாரும், நடராஜ முதலியாரும், சென்னை.
7. திரு. வி. உலகநாத முதலியார், இராயப்பேட்டை, சென்னை.
8. திரு. டி. நல்லசிவன் பிள்ளை, உபசபைத் தலைவர், சைவ சித்தாந்த மகா சமாஜம்.
9. திரு. புரவி. சு. நெல்லையப்ப பிள்ளை, பத்திராதிபர், ‘லோகோபகாரி’ கோமளீசுவரன் பேட்டை, சென்னை.
10. திரு. மணி. திருநாவுக்கரசு முதலியாரும் அவர் நண்பர்களும், சென்னை.
11. மணவழகர் மாணவர் சங்கம், சென்னை.
12. முத்தியாலுபேட்டை ஹைஸ்கூல் உபாத்தியாயர்கள், சென்னை.
13. திரு. பாலசுந்தர முதலியார், ஸோல்டன் கம்பெனி, திருவல்லிக்கேணி.

இப்பெரியோர்கள் சிவபெருமான் திருவருளால் எல்லாச் செல்வமும் நோயற்ற வாழ்வும் நீடிய வாழ்நாளும் பெற்றுத் தமது கருத்துக்கள் யாவும் முடியப்பெற்றுப் பல்லூழி இனிது வாழவேண்டுமென அவன் அழகிய அருளை வழுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூ. 1-8-0. | தபாற்கூலி இல்லை. |
| வெளிநாடு | „ 2-0-0. | |

**விளம்பர விகிதம்**

| | | | | |
|---|---|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ. | 15 | 0 | 0 |
| அரைப்பக்கம் | „ | 7 | 8 | 0 |
| கால்பக்கம் | „ | 4 | 0 | 0 |



ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்

REGISTRAR OF BOOKS ✱ MADRAS ✱
20 JAN 1928

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

" எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே "



| மலர் க. | பிரபவ ௵ மார்கழி ௴<br>1928 ௵ ஜனவரி ௴ | இதழ் க. |
|---|---|---|



## எமது பத்திரிகை

சைவ சித்தாந்த மகா சமாஜம் எனப் பெயரிய இப்பெருங் கழகம் இருபத்திரண்டு ஆண்டுகட்கு முன்னர் எல்லாம் வல்ல முழுமுதற் செழும்பொருளாகிய சிவபெருமான் திருவருளால் இச்செந்தமிழ்த் திருநாட்டிலே தோன்றி நிலைபெறுவதாயிற்று. இச்சிவஞான சங்கத்தை இதுகாறும் கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றாற் சிறந்து திகழும் பெருமக்கள் பலரும் இனிது நடாத்தி வந்தனர். அவர் தம்முள் விதந்து கூறப்படும் பெருமை வாய்ந்தோர் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள், சிவஸ்ரீ கலியாண சுந்தர யதீந்திரர் அவர்கள், ஸ்ரீமத் J. M. நல்லசாமிப் பிள்ளை அவர்கள், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் அவர்கள் முதலியோராவர். இச்சமாஜம் தோன்றிய பின்னரே தமிழ் நன்மக்கள் ஆங்காங்குச் சைவ சபைகளை நிறுவிச் சைவ சமயப் பிரசாரம் செய்வதில் முனைந்து நிற்பாராயினர். இஃது எழுந்த பிறகே தமிழிலே பொருளுரை செய்யும் பழக்கம் மிகுதியும் உண்டாக, இப்பொழுது எங்கும் சொல்வன்மை மிக்க புலவர் பலர் மிளிர்வாராயினர். இது தோற்ற முற்று விளங்கத் தொடங்கிய பின்பே புறச்சமயத்தாரும் இதுபோன்ற பல சங்கங்களை நிறுவிச் செவ்வனே நடத்திவரலாயினர். இத்தகைய அருமை பெருமை வாய்ந்த சமாஜத்தால் விளைந்த நன்மைகள் அளப்பில. எனினும் இது காலவேறுபாட்டால் தோன்றிய காலத்தே இருந்த சீரிய நிலையினின்றும் சிறிது சிறிதாகக் குறையத் தலைப்பட்டது. அதற்குக் காரணம் நமது சைவப் பெருமக்கள் தமது சமயத்திலே தக்கவாறு பற்று வையாமலும் பராமுகமாகவும் இருத்தலேயாம். ஆனால், புறச்சமய சபைகளோ நாடோறும் முறுகி வளர்ந்து வருகின்றன. சைவ சமயத்தின் மிகப் பெரிய உண்மைகளைச் சைவர் பலர் உணராமலும் அறிய அவாவின்றி

யும் இருக்கின்றனர். சைவர் பலர் தாம் அறிந்துகொண்டு தமக்கு இசைந்த வழியில் சமய வொழுக்கம் கைக்கொண்டு நிற்றலோடு அமைந்து விடுகின்றனர்.

ஒரு சிலர்,

'ஓரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்ததன்
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேனமு தருந்தினர் சிலரே'

என்று கூறித் தமது உள்ளத் துணர்வைத் தணித்துக் கொள்கின்றனர்.

இங்ஙனம் சைவராகிய நாம் நமது சமயத்தைப் புறக்கணிக்கலாகாது. நாம் நமது அரிய மதத்தின் பெரிய உண்மைகளை உலகமெங்கும் பரப்பவேண்டும். சைவஞான சூரியன் தனது அழியாக் கதிர்களை ஆங்காங்கு வீசத் தொடங்கினால் பற்றுள்ளம் இல்லாத பரந்த உள்ளமும் விரிந்த நோக்கமும் உள்ள எவரும் 'ஆ! ஆ! இச்சமயமே மெய்ச்சமயம்! உதோ காண்மின் உண்மை மொழிகள்!' என்று வியந்து நயந்துகொள்வர் என்பது ஒருதலை. சைவசமய நூல்களிலே இல்லாத பொருளில்லை. அதன்கண் சொல்லாத உண்மைகள் எச்சமயத்தும் எங்கும் இல்லை. ஆதலின் சைவசமயத்தார் சைவசித்தாந்த மஹாசமாஜத்தை எவ்வாற்றானும் ஊக்கத்துடன் ஓம்பிப் பேணுதலைத் தமது சமயக் கடமைகளில் முதலாவதாக வைத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவுடன் வற்புறுத்துகின்றோம்.

இனி, இச்சமாஜத்தின் சார்பிலே பதினைந்து ஆண்டுகட்கு முன் 'சித்தாந்தம்' எனப்படும் இப்பத்திரிகை எழுவதாயிற்று. அதற்கு முதன் முதல் பத்திராசிரியராகச் சைவசித்தாந்தச் செல்வராகிய [illegible]யாணசுந்தர யதீந்திரர் அவர்கள் விளங்கினர். அப்பெரியார் சைவ வரம்பு சிறிதும் வழுவாமல் தமது அறிவாற்றல்களால் அதனை இனிது நடாத்திவந்தனர். அவர் சிவபெருமான் திருவடிநீழலை எய்திய பின்றைத் திருக்குறள் விளக்க ஆசிரியராகிய ஸ்ரீமத் குப்புச்சாமி முதலியார் அவர்கள் பத்திராசிரியராக அமர்ந்து நன்கு நடத்திவந்தனர். ஆனால் இடையிலே சில இடையூறுகளால் இப்பத்திரிகை ஏழு ஆண்டுகட்குமுன் நின்று விடலாயிற்று. அதுமுதற்கொண்டு இதுகாறும் உண்மைச் சைவர் பலர் உள்ளம் துன்புற்றுச் சிவபெருமான் திருவருளை நோக்கிவரங்கிடந்தமையான் இப்பொழுது இது மெல்லெனத் தலைகாட்டி எழும்புகின்றது. இதன் முதற்பதிப்புக்கு வேண்டும் பொருட்செலவை ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளே ஏற்றுக்கொண்டார்கள்.

இனியும் பொருட்கு முட்டு வாராதபடி ஓராண்டுவரை இந்த ஞான ரதத்தைத் தட்டின்றி நடத்துதற்கு ஊக்கத்துடனும் மகிழ்வுடனும் சைவத்தொண்டர் பலர் முற்போந்துள்ளார் என்பதை உவகையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அன்னோர் பெயர் முதலியன இப்பத்திரிகையில் மற்றோர் இடத்திலே குறிக்கப்பட்டிருக்கின்றன.

இப்பத்திரிகைக்கு ஆசிரியனாக இருக்கும் பொறுப்பு, ஒன்றுக்கும் பற்றாத எளியேம் தலையிலே எம்பெருமான் திருவருள் இருந்த வண்ணம் விழுவதாயிற்று. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே' என்னும் மணிவாசகமே எம்மை இவ்வரும் பெரும்பணியை ஏற்றுக்கொள்ளும்படி தூண்டியது. சைவசித்தாந்த திவ்விய ஞானம் கைவரப்பெற்ற சிவபுண்ணிய முதிர்ச்சியுடைய செந்தமிழ்

17116



வாணர்கள் தமது அறிவு நலம் வாய்ந்த கட்டுரைகளை அவ்வப்போது எழுதி எம்மை ஊக்கி இது குறைவின்றி நடைபெறும்படி செய்வார்களென நம்புகின்றோம்.

இவ்விதழ் திங்கள்தோறும் விரியும். இதன்கண் சைவசித்தாந்த சாத்திர உண்மைகளும் சைவசமய ஒழுக்கங்களும் நூற்பொருள்களும் ஆராய்ச்சிகளும் பிறவும் வெளிவரும். சைவசித்தாந்தத்துக்கு அவிரோதமானவை எவையேனும் விழுப்பயன் தருவனவாயின் இதன்கண் இடம் பெறும். ஆராய்ச்சிப் பொருள்கள் சைவசித்தாந்தத்தின் உண்மைகளோடு பிணங்காதவையாயின் அவை ஏற்றுக்கொள்ளப்படும். இக்காலத்துக்கு ஏற்ற சீர்திருத்தங்கள் இங்ஙனமே தொல்லாணை நல்லாசிரியர் இட்ட சட்ட திட்டங்கட்கு முரண் படாதவையாயும் பெரும்பயன் விளைப்பனவாயும் இருப்பின் இதன்கண் தோன்றலாம். இதில் எழுதப்படும் பொருட்கள் யாவும் எளிய நடையிலே பரிபாஷைச் சொற்கள் இன்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதப்படல் வேண்டும்.

இவையெல்லாம் ஒழுங்குபெற நடைபெறும்படி நம்பெருமான் திருவருள் செய்ய வேண்டுமென அவன் குஞ்சித சேவடியைச் சிந்தித்துக் கிடப்போமாக.

பத்திராசிரியர்.

# சி த் தா ந் த ம்

சித்தாந்தம் எனும் இவ்வட மொழியானது சித்தம் அந்தம் எனப் பிரிக்கப்பட்டு, நிச்சயமான முடிவெனப் பொருள்படும். எவற்றின் முடிபெனின், வைதிகர்கள் யாவராலுங் கொண்டாடப்படும் வேத வேதாந்தங்களின் முடிபெனப்படும். அங்ஙனம் முடிபெனக் கூறுவானேனெனின், ஆன்மாக்களனைவரும் இன்றியமையாது அறிந்தனுபவிக்க வேண்டிய வுண்மையினை முடிவுகட்டி யிருத்தலினா லென்க. வேத வேதாந்தங்களில் அங்ஙன முடிவு கட்டவில்லையோ வெனின், இல்லை, என்னை? வேத வேதாந்தங்களில் முடிவுகட்டியிருக்குமேல் அவற்றிற்கே சித்தாந்தமெனப் பெயர் வந்திருக்க வேண்டும். அன்றியும் வேத வேதாந்தங்களுக் கன்னியமாகச் சித்தாந்தமொன் றிருக்க வேண்டியதில்லை. அங்ஙனமாயின் வேத வேதாந்தங்களில் முடிவுகட்டி யிருத்த லென்னையோ வெனின், சித்தாந்தத்தி லறிந்துகொள்ள வேண்டிய உண்மையினை யறிதற்குச் சாதனமாயுள்ள விடயங்கள் பற்பலவாம். ஆகவே வேதம், வேதாந்தம், வேதாந்ததரம் அல்லது சித்தாந்தம் என ஆசிரியர் சிவஞானயோகிகள் திராவிடமகா பாடியத்தில் வகுத்துக் கூறினர். இம்மூன்றனுள் வேதத்தில் விளங்கக் கிடக்கு முண்மை யென்னையோவெனின் கூறுதும்:

வேதம் கன்மகாண்டம் உபாசனா காண்டம் என இரண்டாக வகுக்கப்பட்டு மந்ததரம், மந்தம் எனும் பக்குவமுடையார்கட்கு முறையே பிரயோசனமாம். எங்ஙனமெனின் மந்ததரத்

தார் மிக்க மலத்தாற் கட்டுப்பட்டு அறிவு மழுங்கிக் கிடக்க அவர்கட்குச் சிறிது அறிவு விளக்கமாம் பொருட்டு, சோதிட்டோமம், அசுவமேதம், அஜமேத முதலிய யாக கன்மங்களை வகுத்தெடுத்துக் கூறிய கன்மகாண்ட முபயோகமாம். அங்ஙனம் அறிவு சிறிது தெளிந்த மாந்தர்கட்குப் பலவகைப்பட்ட தேவோ பாசனைகளை விதந்து கூறியவாற்றால் அவரறிவை விளக்கும் உபாசனா காண்டம் உபயோகமாம். அதாவது ஆன்மாக்க ளனைவரும் பலவகைத்தாய கன்மங்களிற் கட்டுப்பட்டுக் கிடத்தலின், அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கபடியே புத்தி பிரவர்த்திக்கு மாகலின், அவரவர்கள் பலாபலன்கட்குத் தக்கவாறும், காலதேச வேறுபாடுக ளனுசரித்தும், பலதெய்வ வழிபாட்டினைச் சோபான முறையில் விரித்துக் கூறும். அங்ஙனங் கூறவே எங்கெந்த ஆன்மாவிற்கு எவ்வளவு தூரங் கன்மம் வழிவிடுகிறதோ அவ்வளவு தூரஞ் சென்று விசாரித்து, அதிகார பேதம் பற்றிக் கூறியிருக்கும் தெய்வ வழிபாடுகளி லொன்றைப் பற்றிக்கொண்டு திருப்தி யடையும். வேதத்தில் இங்ஙனஞ் சோபான முறையில் கொள்ளவே அதிகார தாரதம்மியத்தால் மேலுள்ள சமயம் கீழுள்ள சமயத்தினை மறுக்கு முகத்தால் ஒன்றுக்கொன்று மாறுபட்டன போலத் தோன்றினும் எவையு மொருவாற்றாற் பிரயோசனமேயாம். இது, “தைத்திரியத்தில் அதிகாரி பேதம்பற்றி அன்னமய கோசம் பிரமமென்றும், அதனை மறுத்துமேல் அதனிற் சூக்குமமாகிய பிராணமயகோசம் பிரமமென்றும், அதற்குமேல் மனோமயகோசம் பிரமமென்றும், அதற்குமேல் விஞ்ஞான மயகோசம் பிரமமென்றும், அதற்குமேல் ஆனந்தமயகோசம் பிரமமென்றும் ஒன்றற்கொன்று சூக்குமமாயுணர்த்துதல் போலவும்; கவுசிதகத்தில் அதிகாரி பேதத்தால் இந்திரன் தயித்தியனுக்குத் தன்னையே பிரமமாகக் கூறியது போலவுங் கொள்க. அங்ஙனம் புல்லை எதிரே காட்டி ஆக்களைப் பிடிக்குமாறு போலச் சோபான முறைமை பற்றிக் கூறிய தென்பதும், அவையெல்லா மொருவாற்றாற் பிரமாணமா மென்பதும் சூதசங்கிதையிற் காண்க,” என்றார் மாதவச் சிவஞான முனிவரர். இங்ஙனமாயின் புறச்சமய வழி யொழுகினரை இழித்துக் கூறுவ தென்னையெனின், அந்நெறி யொழுகுதல்பற்றி யன்று. மற்றென்னெனின், அவற்றையே பொருளாகக் கொண்டு சித்தாந்த நெறியை நிந்தித்தல் கொண்டாம்.

நிற்க. வேதாந்தத்தில் விளங்கிக் கிடக்கு முண்மை யென்னையோவெனின், தீவிரபக்குவ முடையார்கட்கு உபநிடதங்க ளனைத்தினினு மெடுத்து விரித்துக் கூறுங்காரண வாக்கியங்களிற் குறித்த இரணியகருப்பன், நாராயணன் முதலிய தெய்வப் பெயரனைத்தும் சாகபசு நியாயத்தால் முதல்வனையே யுணர்த்த ஞானகாண்ட முபயோகமாம். இதனால் மந்ததரம், மந்தம் எனும் பக்குவமுடையாரின் பொருட்டு வேதத்திற்கூறும கன்மகாண்டமும், உபாசனா காண்டமும், தீவிரம் எனும் பக்குவமுடையாரின் பொருட்டு வேதாந்தத்திற்கூறும் ஞானகாண்டத்திற்கு ஏதுக்களாம். அதாவது அணுவியாயுள்ள ஆன்மாக்கள் பஞ்சமலக் கொத்தினை நீக்கி யவற்றினைக்கடந்த முதல்வனைப் பற்றி அணுநி யாணவத்தை யடக்கி, தனை யறிந்து அம்முதல்வ னுருவாகக் கண்டு தன்னைப் பந்தித்த மலங்கெடவே பாலும் நீரும் போல முதல்வனுந் தானுஞ் சிவோகம் பாவனையி லிருத்தலேயாம்.

“ அணுநி சீவனைம் மலமற்றப் பாலாய்
அணுநி யடக்கித் தனைக்கண் டாணுய்த்
திணுநி மலங்கெடத் தத்துவா தீதம்
விணுவுநீர்பாலாதல் வேதாந்தவுண்மையே”

என்ற சிவானந்தச் செல்வராகிய திருமூலர் வாக்காற் காண்க. ஈண்டு வேதாந்த மென்றது யோகப் பெயராலெடுத்துக் கூறும் வேதத்தின் முடிவாகிய உபநிடதங்களையேயாம். உரூடப் பெயரா லெடுத்துக் கூறும் ஏகான்ம வாதத்தைச் சாதிக்கும் வியாச நூலையன்று. இந்நூலிங்ஙன மாமென்பது சித்தாந்தப் பிரகாசிகையிற் காண்க. நந்தமாராய்ச்சியிற் காண்பது மஃதே. அபரசித்தான ஆன்மாவே அவிச்சையாற்பந்தமுற்றுச் சாதகமுறையிற் பிரமோபாசனை பேணிப் பிரமமாமென்று நிராலம்பம், சருவசார முதலிய வொருசாருபநிடதங்கள் கூறுவது ஏகான்மவாத மன்றோவெனின், அன்று. என்னை? பரசித்தான பரப்பிரமம் அபரசித்தான ஆன்மாவுக் கந்தரியாமியாய் அதுவே தானாய் நின்றுபகரித்தலின் அவ்வொற்றுமைப் பற்றிப் பரப்பிரம நாமத்தாற் சிவான்மாவை அங்ஙனமவை யுபசரித்து வழங்கின வாகலினென்க. கீதாசாரியனாகிய கண்ணன் பரப்பிரமமான சிவனருட் பெற்றியைச் சிவோகம்பாவனையொற்றுமை பற்றி “ நானே சடசித்தெல்லா மாயினேன்” என்று தன் பெற்றியாகக் கொண்டு கூறியதூஉம் இதற்கொரு சான்றாம். சிவோகம் பாவனை யென்றது ஆன்மா பரமான்மாவைக் கூடின விடத்துத் தானென்பதொரு முதலின்றிப் பரமான்மாவுடனே இலயித் தொன்றாப் போமென்னும் ஏகான்ம வாதம் போன்றதன்று, மற்றென்னையோவெனின், வியாப்பிய வியாபக பாவகத்தால் கண்ணொளியும் ஞாயிற்றி னொளியும் போல வேற்றுமை சிறிதுந் தோன்றாதவாறு ஒற்றித்து நிற்றற் குரிய ஆன்மாவின் தொண்டினையும் முதல்வன் கலப்பினையும் நோக்கி நின்று ‘ சிவோயம் ’ எனத் தன்னுட் பாவித்துச் ‘ சிவத்துவமசி ’ என்றறிவுறுக்கும் சித்தாந்த மகா வாக்கியப் பொருளை நாடோறும் பயின்று சிவோகம் எனப் பாவிக்கின்; கருடோகம் பாவனை யொருவன் செய்யப் பெறுமாயின், அக்கருடன் அம்மாந்திரிகனுக்கு வேறாத லின்றி யத்துவித மாத் தோன்றி விடத்தை நீக்கித் தெளிவு செய்யுமாறு போல, முதல்வனும் ஆன்மாவில் வேறாத லின்றி அத்துவிதமாத் தோன்றி மலங்களை நீக்கிச் சுத்தனாகச் செய்தலாம். ஆரியமணியாகிய அரதத்தாசாரியருக்கு மிதுவே கருத்தாதல் ‘வேதத்தில் ஆண்டாண்டுப் பிரமப் பொருளாகிய சிவபிரானுக்கும் ஆன்மாவிற்கும் அத்துவிதபாவனை கூறப்படுமா றென்னையென் றாசங்கித் தெடுத்துக் கொண்டு, கருடனு மாந்திரிகனுந் தம்முள் வேறுதல் வெளிப் படையாயினுங் கருடோக மென்னு மத்துவித பாவனை விடநிவிர்த்திப் பொருட்டு வேண்டப்படும். அதுபோலப் பிரமப் பொருளாகிய பரமசிவனும் ஆன்மாவுந் தம்முள் வேறுதல் வெளிப்படையாயினும் மலநிவிர்த்திப் பொருட்டு வேதத்தில் அத்துவித பாவனை கூறப்பட்டது. கொண்டுதானே நிருபசரித வைக்கியங் கூறுதல் சாலாதென்பது’ என்றங்ஙனம் சதுர்வேததாற்பரிய சங்கிரகத்தோதியவாற்றா னறிக.

இனி, வேதாந்ததரத்தில் அதாவது சித்தாந்தத்தில் விளங்கிக் கிடக்கு முண்மை யென்னையோ வெனின், தீவிர தர பக்குவ முடையாரின் பொருட்டுச் சிவாகமத்திற் பிரதிபாதிக்கப்படு முதல் வனுடைய சிறப்பிலக் கணங்களை நியா யப் பிரமாணங் கொண்டு கரதலாமலக மாக விளக்கி வச்சிர லேபமாக முடிவு கட்டப்பட் டிருக்கிறது. இதனால் வேதாந்த ஞானம் சித்தாந்த ஞானத் திற் கேதுவாம். அதாவது வேதாந்த ஞானத்தாற் சோகம்பாவனை யடைந்த ஆன்மா மனமுதலிய வந்தக் கரணங் களும், சத்த முதலிய தன்மாத்திரை களும் ஏனைத் தத்துவங்களும் இருவித மாயைகளும் தன்னை யடராதவகை திருவருண் மயமாயிருந்து முதல்வனுட னிரண்டறக் கலந்திருத்தலேயாம்.

“ நித்தம் பரனோ டுயிருற்று நீண்மனஞ்
சத்த முதலைந்துந் தத்துவந் தானீங்கிச்
சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந்
தத்தன் பரன்பாலடைதல் சித்தாந்தமே ”

என்ற சிவானுபூதிமானாய திருமூல யோகிகள் திருவாக்காற் காண்க. இத னாற் சிவோகம் பாவனையளவும் வேதாந் தம் எனப்படும், சிவமாய் நின்றவிடம் சித்தாந்தமாம். அதாவது முதல்வனறி வும் ஆன்ம வறிவுங் கலந்த சிவோகம் பாவனை தானான வேதாந்தமாம், ஆன்ம வறிவின்றி முதல்வனறிவு மாத்திரை யாய் நிற்பது தானென்னுஞ் சித்தாந்த மாம்.

“ தானானவேதாந்தந்தானென்னுஞ்சித்தாந்த
ஆனா அரியத் தனுவன் றனைக்கண்டு [ம்
தேனார் பராபரஞ் சேர்சிவ யோகமாய்
ஆனா மலமற் றருஞ்சித்தி யாதலே.”

என்ற சிவஞானத் தபோதனராய திரு மூலநாயனார் திருவாக்காற் றெளிக. அன்றியும், வேதத்தை நெறியெனவும், சைவத்தை (சிந்தாந்தத்தை)த் துறையென வும், கூறி வழியேற்படுவது துறையை யுத்தேசித்தே யாகலின், இரண்டும் நிலைபெற வேண்டுமென்றும் வைத்து,

“ வேதநெறி தழைத்தோங்க
மிகுசைவத் துறை விளங்க”

என்றனர் தெய்வச் சேக்கிழார். சைவா சார துல்யராகிய தாயுமானவரும்,

“ ஆரணமார்க்கத் தாகம வாசி
யற்புத மாய்நடந் தருளும் ”

என வேதத்தை மார்க்கம் என்றும், ஆகமத்தை யதாவது சித்தாந்தத்தைக் குதிரை யென்றுங் கூறினமையின், வேத மாகிற மார்க்கத்தில் சித்தாந்த மாகிற குதிரைமேற் சவாரி கொண்டு பரம காரணமாய் விளங்கு முதல்வன் உலவா நிற்கு மென்றதாயிற்று.

இதுகாறுங் கூறியவாற்றால், வேதாந் தம் பிரமாணம், சித்தாந்தம் பிரமாண மன்றெனப் பிணங்குவாரும், சித்தாந் தம் பிரமாணம் வேதாந்தம் பிரமாண மன்றெனப் பிணங்குவாருமாகி வாழ் பவர் கூற்றனைத்தும் அழகல வென வும், வேதாந்தமும், வேதாந்த தாமு மாகிய சித்தாந்தமும் பரிபாகிகள் பேதத்தா லிரண்டாகி வேதாந்தம் சிவோகம் பாவனையோ டிருக்கும் சீவன் முத்தர் நிலையினையும், சித்தாந்தம் முதல்வனுட னிரண்டறக் கலந்து அனு பவிக்கும் சுத்தாத்து விதானுபவாதீத ஆனந்த நிலையினையும் விளக்குமெனவும் துணிந்து கொள்க. நீலகண்ட சிவாசாரி யர் அப்பயதீட்சிதர் முதலிய சிவாத்து வித சைவாசாரியர்கள் நீலகண்ட பாடி யம், சிவாதித்தமணிதீபிகை சிவதத்துவ தீபிகை முதலியவற்றில் வேதாந் தத்தை மறுத்துச் சித்தாந்தப் பிரமாணி யம் வலியுறுத்துரைத்தார். அரதத்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர்



முதலிய வைதிகாசாரியர்கள் சதுர்வேத தாற்பரிய சங்கிரகம், பவுட்கர விருத்தி முதலியவற்றில் வேத சித்தாந்தப் பிர மாணியம் வலியுறுத் துரைத்தார்கள்.

சிவராஜ யோகிகளாகிய திருமூலர்,

“ வேதமோடாகமமெய்யா மிறைவனூல்
ஓதும்பொதுவுஞ்சிறப்புமென் றன்னுக
நாத னுரையிவை நாடிலிரண் டந்தம்
பேதமதென்னிற்பெரியோர்க்கபேதமே ”

என்றனர்.

முதல்வன் பெருங்கருணை யாளனாகலின், உலகத்தா ருய்யும் பொருட் டும், சத்திநிபாத முடையா ருய்யும் பொருட்டும் பொருள் பலபடத்தோன் றுஞ் சூத்திரமும், அதனை யவ்வாறாக வொட்டாது தெளித்துரைக்கும் பாடிய மும் போல முறையே வேதாந்தமும், சித்தாந்தமும் அருளிச் செய்தான் ஆக லான் அவை யிரண்டும் முறையே பொதுநூல் சிறப்பு நூலெனப்பட்டுச் சூத்திரமும் பாடியமும் போல வேறு வைத்தெண்ணப் பட்டன வெனவும், ஏனைய நூலனைத்தும் இவை யிரண்டி னின்றும் விரிந்த நூல்களே யாமென வும்,

“ வேதநூல் சைவநூலென்
றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின்
விரிந்த நூல்கள்
ஆதிநூ லனாதியம
லன்றருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுச்சைவம்
அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினா லுலகர்க்குஞ்
சத்திநிபா தர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையின்
ஒழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள்கொண்டுரைக்கும்
நூல்சைவம் பிறநூல்
திகழ்பூர்வஞ் சிவாகமங்கள்
சித்தாந்த மாகும் ”

என்றனர் சகலாகமபண்டித சுவாமிகள். இக் கருத்திற்கிணங்கவே, தொண்டர் சீர் பரவுவாராய அருண் மொழித் தேவரும்,

“ உலகியல் வேதநூ லொழுக்க மென்பது
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்”

என்றனர்.

ஆதலின் இவை முதலாய பல கார ணம் பற்றி வேதாந்தம் சித்தாந்தத்திற் குச் சோபானமென்பது சர்வ சம்பிரதி பன்னமாயிற்று.

[சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரர் அவர்கள் எழுதிய கட்டுரையினின்றும் எடுக்கப்பட்டது.]

# சைவ சாரம்

இந்நில வுலகத்திலே பலதிறப் பட் டுப் பலவாறு விரிந்து கிடக்கும் பல வேறு மதங்களுட் சைவ சித்தாந்தமும் ஒன்றாக வைத்துச் சிலராலும் பல ராலும் புகழப்படுதலும் இகழப் படுத லும் உடையதாய் வந்தமையினாலே, அதனால் நன்மக்கள் பலரும் தாம் பெறு தற்குரிய பெரும் பயனைப் பெறாது இழந்து விடுவதும் ஆயினர். சைவ சித்தாந்தம் என்னும் அரிய பெரிய தத்துவத்தின் கண்ணே போதிக்கப் படுகின்ற உண்மைப் பொருள்களை உற்று நோக்கிப் பார்க்குங்கால் அவை கள் ஒரு மதத்திற்கே உரிய ஏகதேசக் கொள்கைகளாகச் சிறிதுந் தோன்ற வில்லை; அவைகள் எல்லா மதத்திற்கும்

உரிய எல்லாக் கொள்கைகளையும் உள்ளடக்கி விளங்கும் வியாபகத் தன்மையுடையவாய்க் காணப்படுகின்றன. அநாகரிக நிலையில் மிகத்தாழ்ந்து நிற்போர் முதல் அற்புத நாகரிக வாழ்க்கையில் அறிவு நனி துலங்கித் திகழும் ஆன்றோர் ஈறாக எல்லார் சிந்தனையினும் இடைவிடாது தோன்றும் எல்லா உண்மைக் கருத்துகளையும் இனிது எடுத்துக் காட்டுவதுதான் இச்சைவ சித்தாந்த தத்துவத்தின் இயல்பாம். இங்ஙனம் இஃது எல்லாச் சமயக் கொள்கைகளையும் தன்னுள் அடக்கித்தான் வியாபகமாய் இருத்தலினா லன்றே மகா ஞானியான தாயுமான சுவாமிகள்,

“ இயல் பென்றுந் திரியாம லியமமாதி
  எண்குணமுங்காட்டி யன்பாலின்பமாகி
பயனருள்அப் பொருள்கள் பரிவாரமாகிப்
  பண்புறவுஞ் சௌபான பட்சங்காட்டி
மயலறு மந்திரஞ் சிட்சை சோதிடாதி
  மற்றங்க நூல் வணங்க மௌனமோலி
அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்
                    [கத்தில்
  அமர்ந்தது வைதிகசைவம் அழகிதந்தோ”

என்றும்,

“ சன்மார்க்க ஞானமதின்
    பொருளும் வீறு
  சமயசங்கேதப் பொரு
    ளுந்தா னொன்றாகப்
 பன்மார்க்க நெறியி
    னிலுங் கண்டதில்லை
  பகர்வரிய தில்லைமன்றுட்
    பார்த்த போதங்கு
 என்மார்க்கம் இருக்கு
    தெல்லாம் வெளியேயென்ன
  எச்சமயத் தவர்களும்
    வந்திறைஞ்சா நிற்பர் ”

என்றும் திருவாய் மலர்ந்தருளினார்.

இனி, இச்சைவ சித்தாந்தத்தின் கண்ணே சொல்லப்பட்ட முழுமுதற் கடவுளின் இலக்கணங்களைச் சிறிது எடுத்து விசாரிப்போமாயின் அவை எல்லாச் சமயத்தார்க்கும் உடன் பாடாயுள்ளமை தெற்றெனப் புலப்படும். நம்முடைய அநுபவத்திலே காணப்பட்ட பொருள்களை யெல்லாம் பகுத்துப் பார்ப்போமானால் அவைகள் அறிவுடைய சேதனப் பிரபஞ்சமும் அறிவில்லாத அசேதனப் பிரபஞ்சமும் என இருகூறாய் அடங்கும். அறிவுடைய சேதனப் பிரபஞ்சத்துள், புல்முதல் தேவர் ஈறாகச் சொல்லப்படும் அளவு படாத சரீரங்களுள் வசிக்கும் அளவு படாத எல்லா உயிர்களும் அடங்கும். இவ்வுயிர்கள் எல்லாம் சிற்றறிவுடையவைகளாயும் சிறுவல்லமை யுடையவைகளாயும் இறப்பு, பிறப்பு, இன்பம், துன்பம், மறப்பு, நினைப்பு, காமம், கோபம், மயக்கம் முதலிய குற்றங்கள் உடையனவாயுங் காணப்படுதலின் கடவுள் என்று சொல்லப்படுங் குற்ற மற்ற செழும்பொருள் இவ்வுயிர்களுள் ஒன்றாக மாட்டாது.

இனி அறிவில்லாத அசேதனப் பிரபஞ்சத்துள் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதங்கள் முதலாக நமது பஞ்சேந்திரியங் களுக்கும் புலனாகாமல் அதிசூக்குமமாய் விளங்கா நிற்கும் விந்துநாத தத்துவங்கள் ஈறான எல்லாப் பொருள்களும் அடங்கும். இம்முப்பத்தாறு பொருள்களும் அறிவில்லாத ஜடப்பொருள்கள் ஆகையினால் இவைகள் தம்மை ஒருவர் அசைவித்தால் அன்றித் தாமாகவே அசைய மாட்டாமற் கிடக்கும். எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் உடைய பரம்பொருளான கடவுள் இம்முப்பத்தாறு பொருள்களுள் ஒன்றாக மாட்டாதென்பது எல்லார்க்கும் பொருத்தமான



கொள்கையே யாம். ஆகவே, சிற்றறிவுயிர்களான சேதனப் பிரபஞ்சத்திற்கும், அறிவே யில்லாத ஜடப்பொருள்களான அசேதனப் பிரபஞ்சத்திற்கும் வேறான சொரூபமும் வியாபகமும் உடைய முழுமுதற் பரம்பொருளான கடவுளுக்கே சிவம் என்னும் பெயர் சைவ சித்தாந்தத்திற் சொல்லப்பட்டது. இத்தன்மைத்தான முழுமுதற் கடவுளையே ஆசிரியர் தொல்காப்பியனார் ‘கந்தழி’ என்று பெயர் கூறியதூஉம், அச்சொற்பொருளையே நச்சினார்க்கினியர் “ ஒரு பற்றும் அற்று அருவாய்த் தானேயாய்த் தத்துவங் கடந்த பொருள் ” என்று உரை கூறியதூஉமாம்.

இனிச் சிவன் என்னும் முழுமுதற் பழம் பொருள் உயிர்களான நம் பொருட்டு ஓர் அருமைத் திருவுருக் கொண்டு தோன்றி நமக்கு அருள் செய்யா நிற்கும். அவ்வுருவமானது நம்மனோர்க்குள்ள இவ்வுடம்பின் உருவம் போலாது அவ்விறைவனது அருள் ஒளியிற் சமைந்த தொன்றாகும். அவ்வருளுருவத்தின் அடையாளங்களையே நாம் கல்லினுஞ் செம்பினுந் தோற்றுவித்து வழிபட்டு வருகின்றோம். இவ்வழிபாட்டின் கண் நாம் கல்லையுஞ் செம்பையும் கடவுளாகக் கொள்ளாது அவற்றின் கண் உள்ள உருவம் அவை தம்மால் நமக்கு நினைவுறுத்தப் படுதலின் அவ்வருவுருவத்தையே வணங்கி வருகின்றோம். இவ்வாறு கடவுளின் உருவத்தைக் கல் முதலிய பொருள்களின் வாயிலாக நினைவுற்று வணங்கும் வழிபாடு இவ்வுலகத்திலுள்ள எல்லா மாந்தரிடத்திலும் இயற்கையாகவே வழங்கி வருகின்றது.

இனி இச்சிவம் என்னும் பரம்பொருளுக்கு உருவமே யன்றி அருவமும், அருவுருவும், இம்மூன்று மல்லாதாய் வாக்குமனத்திற்கு எட்டாத ஓர் அற்புத நிலையும் உண்டு. ஆதலின், இப்பரம்பொருளை யார் யார் எவ்வெப்பெயர் இட்டு அழைப்பினும் அவ்வப்பெயரெல்லாம் அதற்குப் பொருத்த மாவதே யாம். இதுபற்றி யன்றோ சிவஞான சித்தியாரில்,

“ அறுவகைச் சமயத் தோர்க்கும்
    அவ்வவர் பொருளாய் வேறாங்
  குறியது வுடைத்தாய் வேதாக
    மங்களின் குறியிறந்தங்கு
  அறிவினில் அருளான் மன்னி
    அம்மையோடு அப்பனாகிச்
  செறி வொழியாது நின்ற
    சிவனடி சென்னி சேர்ப்பாம் ”

என்னும் அருமைத் திருவாக்கு எழுந்தது. இன்னும், யார் யார்க்கு எவ்வெப் பெயரிட்டு அழைப்பதில் அன்பு செல்லுமோ அவ்வப் பெயரான் எல்லாம் நம்பெருமான் அவர்கட்கு வந்து அநுக்கிரகிப்பன் என்பது ஆன்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்ததேயாம். சிலர் உருத்திரன் என்றும், சிலர் திருமால் என்றும், சிலர் நான்முகன் என்றும், சிலர் அருகன் என்றும், சிலர் புத்தன் என்றும் எங்ஙனம் பெயர் சொல்லி எவ்வாறு அன்பு செலுத்தினாராயினும் அவ்வாறெல்லாம் அவர் அவனருளைப் பெறுதல் திண்ணமாதல் பற்றி யன்றே முற்றத் துறந்த பட்டினத்துப் பிள்ளையார்,

“ இடத்துறை மாதரோடு ஈருடம் பென்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை யென்றும்
புலியத ளன்பொடு புனைந்தோ யென்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோ யென்றும்
திருவமர்மா லொடு திசைமுகன் என்றும்
அருவமும் உருவமும் ஆனாய் என்றும்
உளனே யென்றும் இலனே என்றும்
தளரா னென்றும் தளர்வோ னென்றும்
ஆதி யென்றும் அசோகினன் என்றும்

"போதியிற் பொலிந்த புராணன் என்றும்
இன்னவை முதலாத் தாமறி யளவையின்
மன்னிய நூலுடன் பன்மையுள் மயங்கிப்
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வவை யாகிப்
பற்றிய பளிங்கு போலும்
ஒற்றிமா நகருடையோய் உருவே"

என்றருளிச் செய்தனர். இவ்வுண்மையினையே பிற்காலத்து இராமலிங்க சுவாமிகளும்,

"பெருகியபே ரருளுடையார்
அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகையென் கணவர்திருப்
பேர்புகலென் கின்றாய்
அருகர் புத்தராதி யென்பேன்
அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன்
ஆதிசிவ னென்பேன்
பருகுசதா சிவமென்பேன்
சத்திசிவ மென்பேன்
பரமமென்பேன் பிரமமென்பேன்
பரப்பிரம மென்பேன்
துருவு சுத்தப் பிரமமென்பேன்
துரியநிறை வென்பேன்
சுத்த சிவனென்பேன் இவை
சித்துவிளை யாட்டே"

என்று இனிது விரித்து உணர்த்தியருளினர். ஆகையால், எம் அருமைச் சகோதரர்காள்! சைவ சித்தாந்தத்திற் சொல்லப்பட்ட சிவத்திற்கு எவர் எப்பெய ரிடினும் அப்பெயரெல்லாம் அதற்கு அங்கீகார மென்றே அறிமின்! சமணம், புத்தம், சாக்தம், வைணவம் முதற்கொண்ட எல்லாச் சமயங்களும் சைவ சித்தாந்தத்திற்கு உடன்பாடா மென்றே தெளிமின்! சைவ சித்தாந்தத்தில் மதச் சண்டைக்குச் சிறிதும் இடமில்லையென்று உணர்மின்கள்! எல்லா மதங்களையும் ஒற்றுமைப்படுத்துதற்குச் சைவ சித்தாந்தம் இன்றியமையாத ஓர் அருமைத் தத்துவ ஞானமா மென்று கடைப்பிடிமின்!

இனி இச்சைவ சித்தாந்த உணர்ச்சியினாற் பெறற் பாலதாம் பெரும் பயனும் எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாகும்.

"சினமடங்கக் கற்றாலுஞ் சித்தி
யெல்லாம் பெற்றாலும்
மனமடங்கக் கல்லார்க்கு
வாயேன் பராபரமே"

என்றும்,

"ஆங்கார முள்ளடக்கி
ஐம்புலனைச் சுட்டெரித்துத்
தூங்காமற் றூங்கிச்
சுகம்பெறுவ தெந்நாளோ"

என்றும் தாயுமான சுவாமிகள் அறிவுறுத்தருளிய வண்ணம், நம்முடைய எல்லாத் துன்பங்கட்கும் மூலகாரணமான அகந்தையை விட்டுச் சிவத்தின் அருட்பெரு வெள்ளத்திலேயே நமதறிவைப் படிய வைத்து எல்லாரிடத்தும் இடையறாத உண்மையன்பு பாராட்டி, அங்ஙனம் பாராட்டுதலாலே நம்மாட்டு அகந்தையைச் செய்யும் ஆணவமலக் கொத்தானது நம்மை விட்டகல, நம்மிடத்து முன்னெல்லாம் விளங்காமல் ஒடுங்கி உள்ளிருந்த சிவானந்தப் பெருக்கானது பொங்கி எழுந்து நங்கருவி கரணங்களை யெல்லாம் கழுவித் துடைத்துச் சுத்த சிவரூபமாக்க நாம் அப்பேரின்பத்தை நுகர்ந்திருப்பதே முடிபொருளாம். ஆகவே, துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமுமே ஆன்மாக்களான நாம் இத்தத்துவ ஞானத்தாற் பெறற்பாலவாம்பயன். இம்முடிபு எல்லா மதத்தினர்க்கும் முற்றும் உடன்பாடான முடிபாம். ஆன்மாக்களான நாம் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே உயர்த்தும் பிறரை இழித்தும் நினைப்பதனால்



அகந்தையானது மேன்மேல் விளைகின்றது. நான் உயர்ந்த சாதியேன் அவனோ இழிந்த சாதியான், நான் செல்வமுடையேன் அவனோ வறியன், நான் மேற்பதவியிலுள்ளேன் அவனோ கீழ்ப்பதவியிலுள்ளான், நான் உண்மைச் சமயத்துள்ளேன் அவனோ பொய்ச் சமயத்துள்ளான், நான் பெருமை மிக்க ஆண்மகன் அவளோ சிறுமை மிக்க பெண்மகள் என்று கருதுதலால் நமக்குள் இடையறாது அகந்தை விளைய, அவ்வகந்தை விளைவால் கோபம், குரோதம், கொலை, பகை, பிரிவினை முதலிய தீச் செயல்கள் நிகழ, அவற்றான் நம் அறிவு மேலும் மேலும் விகாரப்பட்டுப் போக நாம் துன்பத்திற்கே நிலைக்களனை பிறப்பு இறப்பு வட்டங்களிற் கிடந்து கிடந்து சுழல்கின்றேம்! ஆ! இவ்வகந்தை யொழியும் நாள் எந்நாள்! இத்துன்பம் விலகுவ தெப்போது! இவற்றை யொழிப்பதுதான் எவ்வாறு! என்று யாம் நினைந்து உருகுந்தோறும் உருகுந்தோறும் "சாதிகுலப் பிறப்பென்னுந் தடஞ்சுழியில் அகப்பட்டு" என்னும் மாணிக்கவாசகப் பெருமான் திருவாக்கை எண்ணி "என்னினுங் கடைப்பட்டார் யார்? என்னினும் இழிந்தார் யார்? சளையுஞ் சளியும் சிறுநீரும் மலக்கும்பியும் ஊனும் உதிரமும் நிறைந்த அசுத்த உடம்பினுள் வசிக்கும் யானோ உயர்ந்த சாதியேன்! யானோ உயர்குலத்தேன்! யானோ செல்வமுடையேன்! யானோ பதவியுடையேன்! யானோ மெய்ச்சமயத்துள்ளேன்! யானோ ஆண்மகன்!" என்று தன் சிறுமையை நாம் ஒவ்வொருவரும் எந்நேரமும் கருதிப் பார்த்து எல்லாரிடத்தும் உயர்வு தாழ்வு பாராது மனம் இளகி அன்பு பாராட்டி ஒருவர்க்குள்ள துன்பத்தை ஒருவர் நீக்கி உதவி செய்து ஒருமையாய் வாழ்குவமாயின், வரம்பின்றிப் பெருகிய இவ்வன்பே நம்மைப் பேரின்பத்தின்கண் உய்க்கும். என்னை? சைவ சித்தாந்தத்திலே அன்பே சிவமாமென்பது சொல்லப்பட்டமையாலும், இவ்வருமைக் கொள்கையினையே மகா யோகிகளான திருமூலர்,

"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவி
அன்பே சிவமாவ தியாரும் அறிகிலார் [லார்
அன்பே சிவமாவ தியாரும் அறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருக் தாரே"

என்று வற்புறுத்தி அருளிச் செய்தமையாலும் என்பது.

[ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் எழுதிய கட்டுரையினின்றும் எடுக்கப் பட்டது.]

187/61

# "ஓட்டிட்ட பண்பு"

'மட்டிட்ட புன்னையங்
கானன் மடமயிலை
கட்டிட்டம் கொண்டான்
கபாலீச்சுர மமர்ந்தான்
ஓட்டிட்ட பண்பி
னுருத்திரபல் கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே
போதியோ பூம்பாவாய்.'

(ப - ரை.) மட்டு இட்ட - தேன்பொருந்திய, புன்னையம் கானல் - புன்னை மரங்கள் அடர்ந்த காட்டினிடத்தே, மடமயிலை - தன்னைப்பூசித்த இளமையுடைய மயில்போன்ற உமாதேவியாரை, கட்டுஇட்டம்-மணக்கின்ற விருப்பத்தை, கொண்டான் - கொண்டவனாய், கபாலீச்சரம் - கபாலீச்சரமென்னும் திருத்தலத்தை, அமர்ந்தான் - விரும்பி எழுந்தருளிய பரமசிவனிடத்தே, ஓட்டு இட்ட - பொருந்தும்படி எண்ணிய, பண்பின் - குணத்தோடு கூடிய, உருத்திர பல்கணத்தார்க்கு - பலசிவனடியார்களுக்கு, அட்டுஇட்டல் - சமைத்து உண்பித்தலை, காணுதே - பாராமலே, பூம்பாவாய் - அழகிய பாவை போல்பவளே, போதியோ - போகின்றனையோ; இது நீதியும் அறமு பாமோ. (எ-று.)

இனி, இத்திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருமயிலையில் திருவருள் செய்த தேவாரத்தின் முதற்பாசுரமாயுள்ள இத்திருப்பாசுரத்தினிடத்தே உள்ள "ஓட்டிட்ட பண்பு" என்பதைப் பற்றிச் சிறிது ஆராய்தலே நாம் எடுத்துக்கொண்ட விடயமாகும்.

அதாவது, "ஓட்டிட்ட பண்பு" எனில் பொருந்தும்படி விரும்பிய குணம் எனக் கூறுகின்றோம். எதனோடு பொருந்துதல் எனில், கபாலீச்சரம் அமர்ந்தானோடு பொருந்துதல். அது என்னையோவெனின், அவன் திருவடி நீழலைப் பெறுதலேயாம். திருவடி நீழலை எக்காலத்துப் பெறுவது என்று கூறின், உயிர்கள் பஃறிறப்பட்ட பிறவியினுள் தோன்றி யழிந்து, மக்கட் பிறவியை யடையும் பேற்றினைப் பெற்ற பின்னரே யாம். பல பிறவிகளுக்குப் பின்னர் மக்கட் பிறப்பினை அடைவது என்பதை, "மானுடத்து உதித்தல், கடலைக் கையால் நீந்தினன் காரியங் காண்", "எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்," "அரிதரிது மானுட ராதலரிது," "எண்ணரிய பிறவிதனின் மானுடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண்" என்னும் அருமைத் திருவாக்குகளே நிலைநிறுத்தும். இனி, மக்கட் பிறவியினுள், உலகாயதம் முதல் சைவம் ஈறுகச் சொல்லப்பட்ட புறப்புறச் சமயமும், புறச் சமயமும், அகப்புறச் சமயமும், அகச் சமயமும் என்னப்பட்ட சமயங்களிலெல்லாம் நின்று சோபான முறையாகச் சைவத்தினைப் போதிக்கும் சித்தாந்த சமயத்தைத் தலைப்படும் புண்ணியத்தைப் பெற்ற பின்னரேயாம். இதனையே,

"புறச்சமய நெறிநின்றும்
அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும்
புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்தும்
அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும்
ஆரணங்கள் படித்துஞ்
சிறப்புடைய புராணங்க
ளுணர்ந்தும் வேதச்
சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ்
சென்றாற் சைவத்
திறத்தடைவ ரிதிற்சரியை
கிரியா யோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற்
சிவனடியைச் சேர்வர்"



என்று நம் சந்தான குரவருள் ஒருவராகிய அருணந்தி சிவாசாரியர் அருளிச் செய்த திருவிருத்தமே எல்லாச் சமயங்களிலும் இருந்து வந்தவரே சித்தாந்த சைவர் என்று வலியுறுத்துவதாயிற்று. இவ்விதப் பெரியதோர் தகுதி வாய்ந்தாராய சித்தாந்த சைவர்கள் தமக்குரிய ஒழுக்கமாகிய விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் கொண்டு ஒழுகும் காலத்துப் பக்குவமடைந்த உயிர்களாகின்றனர். அவ்விதத் தகுதி யடைந்த உயிர்களிடத்து உள் நின்று அதுகாறும் உணர்த்தி வந்த தலைவன் புறம்போந்து இச்சைத் திருமேனியாக மானுட சட்டை தாங்கி எதிர்வந்து அப்பக்குவப்பட்ட உயிரொன்றினை நோக்கி, "மனிதனே, நீ என்மகன். இதுகாறும் ஐம்புல வேடரிடத்தே அகப்பட்டு மயங்கினாய்" என்று திருநோக்காலும், பரிசத்தாலும், திகழும் வாக்கலும் உணர்த்துவார். அவ்விதம் உணர்த்திய காலத்து அதுகாறும் ஐம்புல வேடரின் வலையுட்பட்டு, விருப்பென்றும் வெறுப்பென்றும் கொண்டிருந்த ஆன்மாவானது தனது முதல்வனைப்போல் விருப்பும் வெறுப்புமற்று, இருவினை யொப்பினை யடைகிறது. இருவினை யொப்பாவது நல்வினையால் வருகின்ற இன்பமும், தீவினையினால் வருகின்ற துன்பமும் ஆகிய இரண்டனையும் ஒன்றாகவே கொள்வது. அவ்வித இருவினையொப்பு கொண்ட ஆன்மாவானது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற நான்கு படிகளுள் தன் அறிவைச் செலுத்திப் "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும், மருளானும் மாணாப் பிறப்பு" என்னும் வேத வாக்கின் வண்ணம் பொய்ப் பொருளிடத்தே செலுத்தாது, "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர், மற்றீண்டு வாரா நெறி" என்றபடி மெய்ப்பொருளாகிய பதிப்பொருளிடத்தே அறிவைச் செலுத்துகின்றது. பசுஞானத்தாலும், பாசஞானத்தாலும் அறியக் கூடாத பதிப்பொருளைப் பதிஞானத்தால் உணர்ந்த ஆன்மாவானது, அப்பதிப் பொருளாகிய ஆண்டவனது திருவடியைச் சிந்திக்கின்றது. சிந்தித்தலால் அநாதியாக வந்த பாசமானது அவ்வுயிரை விட்டு நீங்குகின்றது. அக்காலத்துப் பதிப்பொருளாகிய ஆண்டவன் வெயிலின் நின்ற உயிர்க்கு நிழல்தரு மரம்போல் திருவடி நீழலைத் தருகின்றனன். இத்திருவடி நீழலை அடைதற்கு விதி அஞ்செழுத்தை எண்ணுதலேயாம். இவ்விதமெல்லாம் நின்ற சார்ந்ததன் வண்ணமாயுள்ள ஆன்மாவானது தான் சார்ந்த திருவடியின் தன்மையையே அடைகின்றது. அது எதுபோ லெனின், மாணிக்கத்தைச் சார்ந்த படிகமானது மாணிக்கத்தின் ஒளியைப் பெற்ற காலத்து, தன்னொளி மழுங்கி மாணிக்க ஒளியேயாய் நிற்பது போல் ஆன்மாவும் ஆண்டவனது எண்குணத்தன்மையைப் பெற்ற காலத்து அத்தன்மையதே யாகித் தன் அறிவாகிய சிற்றறிவு ஒழிந்து பேரறிவினனாகிய அவன் அறிவினைப் பெற்று அவன் திருவடியில் பொருந்தி நிற்கும். அக்காலத்து ஆன்மாவைப் பற்றி நின்ற மும்மலங்களும் ஒடுங்கும். இவ்வொடுக்கமே மலபரிபாகம். இனி இருவினை யொப்பும், மலபரிபாகமும் பெற்ற ஆன்மா சத்தி வீழ்தலைப் பெறுகின்ற சத்திநிபாதம் அடைகின்றதாதலால் தன்னை அறிகின்

றது. தன்னை அறிந்த ஆன்மா தன்னையறிவித்த ஆண்டவனையும் காண்கின்றது. அவ்விதம் ஆன்மா தன்னையும் ஆண்டவனையும் உணர்ந்த காலத்துத் தன்னை மறந்து ஆண்டவனாகிய அவன் திருவடியிலேயே நீங்கா அன்புடன் நிற்கின்றது. இதனை "தன்னை மறந்தாள், தலைப்பட்டாள், நங்கை தலைவன் தாளே" என்னும் அமுதவாக்கே அறிவுறுத்தும். இவ்விதத் தன்மை யடைகின்ற உயிர் ஒன்றே சீவன் முத்தத் தன்மையை யடைந்ததாகிறது. சீவன்முத்தத் தன்மையை யடைந்த உயிராயினும் அநாதியாகத் தொடர்ந்து வந்த ஆணவமலத் தொடக்கானது இங்குளி வாங்கும் கலம்போல் அதாவது பெருங்காயம் இருந்த குடுக்கையைப் பலமுறைக் கழுவினாலும் மெதுவாகக் கந்திப்பது போல் துன்புறுத்தா வண்ணம் கொண்ட உபாயமானது இறைவனது திருவடியே உயிர்க்கு உறுதியாகக் கொண்டு நிற்கும் சிவனடியவர்களையும் அவனது திருக்கோயில்களையும் அவ்விறைவனாகவே பாவித்து அன்பு செய்வதேயாம். இவ்விதம் அன்பு செய்த உயிரே ஞானத்தால் சிவனடியைச் சேர்ந்ததாகும். இவ்வுயிர்களே உருத்திரப் பல்கணத்தார் என்பார், "ஒட்டிட்ட பண்பின் உருத்திரப்பல் கணத்தவர்" என்றனர். அவ்விதம் கூறியதுடன் "ஓ பூம்பாவாய்" இத்துணை பெரிய பரமஞானிகளுக்கு அட்டிட்டலைக் காணுதலன்றோ தகுதியுடையது. அவ்விதத் தகுதியினைக் காணாமல் செல்வது தகுதியென்னும் நடுவு நிலைமைக்குப் பொருந்துமோ" என்று ஆற்றாது வியந்து கூறினர் என்பது.

இனி முடிந்தது முடித்தலாக இத்திருப்பாசுரத்தால் ஞானவான்களாகிய சிவனடியார்களுக்கும் சிவபெருமானுக்கும் உள்ள பொருத்தம் இதுவென்றும், அப்பொருத்தமுடையவரை மனத்தால் சிந்தித்தலும், வாக்கால் கூறலும், காயத்தால் வணங்கலுஞ் செய்வதுடன் அவர்க்கு விருந்து அயர்தலே மக்கட்பிறப்பாலாகிய பயனை அடைவதற்கு ஏதுவாகுமென்பது அறிந்ததாயிற்று.

கி. குப்புச்சாமி முதலியார்,
திருக்குறள் விளக்காசிரியர், கிருஷ்ணாம்பேட்டை.

# சைவசித்தாந்தமும் மேல்நாட்டு அறிவியல் நூல்களும்

சைவம் மிகத் தாழ்ந்த நிலையில் இக்காலத்தில் இருக்கின்றதெனப் பலர் முறையிடுதலை நாம் நாடோறும் கேட்டு வருகிறோம். சமயவளர்ச்சி, சமய வாழ்க்கை முதலிய பொருள்கள் பற்றி அறிஞர் பலர் எழுதியும் பேசியும் தம்மாலியன்றவரை செயலில் காட்டியும் வருகின்றனர். ஒருசாரார் சைவ சித்தாந்தத்துக்கு இருகண்கள் போன்று விளங்கும் தமிழ் மறையாகிய பன்னிரு திருமுறைகளையும், சாத்திரம் பதினான்கையும் கற்றுத் தாம் உணர்ந்த முடிபுகளை மேல்நாட்டு வரலாறு, இயற்கை, தத்துவம், ஆராய்ச்சி முதலிய அறிவியற் பகுதி நூல் முடிபுகளோடு ஒப்பிட்டு ஆராய்ந்து தாம் கண்ட ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி உண்மை எவ்வாறிருத்தல் வேண்டுமெனக் கூறுகின்றனர். இஃதே ஆராய்ச்சி முறை (Critical method) எனப்படும். இம்முறை அறிவுள்ள எவ்வகை மக்களுக்கும் எக்காலத்தும் உரித்தாயினும், இக்காலத்தில்தான், எல்லா நாட்டிலும், பேரறிஞர் பலராலும் போற்றப்பட்டும் கையாளப்பட்டும் வருகிறது. இம்முறையின் பயன் இத்தகையது என்று எடுத்துக் கூறலும் சைவ நன்மக்கள் பலருக்கு வேண்டியிருக்கிறது. ஏனெனில் ஆராய்ச்சி முறைப் பழக்கம் சற்றுமில்லாத சைவர்களுள் ஒருசாரார் "சாத்திரம் தோத்திரம் என வகுத்துக் கூறிய சமய நூல்கள் அருள்மொழிகள், அவைகளை அருள்கொண்டு அருள் பெற்றவர்களே அறிதல் கூடும். ஏனையோர் தம்மறிவு கொண்டு ஆராய்தல் பெரும் பேதமை. இடருக்கு இடனாவதோடு பிறருக்கும் இடரே விளைக்கும். ஆராய்ச்சி முறையால் நலன் விளைதல் எவ்வாற்றானும் இல்லை" என மிகத் துணிவோடு இற்றைக்கும் சாதித்து வருகின்றனர்.



ஆகவே ஆராய்ச்சி முறையின் பெரும் பயனைச் சைவ நன்மக்கள் உணர்வது இன்றியமையாத முதற்கடனாகும். இவ்வுணர்ச்சியை எழுப்பி, ஆராய்ச்சி முறையைக் கைப்பற்றி மேல்நாட்டு அறிவியற் பகுதிகள் பலவற்றிற்குரிய நூல்களைப் பயின்று, அவற்றின் முடிபுகள் எவ்வாறு சைவசித்தாந்த முடிபுகளோடு முழுமையும் ஒத்திருக்கின்றன என்பதைக் கண்டு சைவ நன்மக்கள் தங்களறிவைப் பெருக்கிக் கொள்வதோடு சமயத்தையும் வளர்த்தல் வேண்டுமென்பதே இக் கட்டுரையின் நோக்கம். இந்த வழியில் செய்யும் முயற்சியே பெரும் பலனைத் தரும். சைவத்தையும் உலகெங்கும் பரப்பும். இவ்வகை முயற்சியே சைவத்தினின்றும் விலகியவர்களையும் புறச்சமயத்தவரையும் சைவத்திற் சேர்ப்பிக்கும். இப்பணியே "அரன் நாமமே, சூழ்க வையகமுந் துயர்தீர்கவே" எனத் திருவாய் மலர்ந்தருளிய ஞான குரவர்க்கு ஏற்ற திருவடிக் காணிக்கையாகும்.

ஒரு போர்வீரன் உருவச் சிலையை நண்பர் இருவர் கண்டனர். அவ்வீரன் கையிலிருந்த கேடயம் ஒரு பக்கம் சிவப்பாகவும் பின்பக்கம் கறுப்பாகவும் இருந்தது. சிவப்புப் பக்கத்தைமட்டும் பார்த்தவன் சிவப்பென்றான். கறுப்பை மட்டும் பார்த்த நண்பன் கேடயம் கறுப்பென்றே சாதித்தான். இருவருக்கும் போர் விளைந்தது. இதைக் கண்ணுற்ற வழிப் போக்கன் அவர்களை வினாவி இருபக்கத்தையும் காட்டி அவர்கள் கலாத்தைப் போக்கினான். இவ்வரலாற்றினின்றும் நாம் அறிய வேண்டியது ஒன்று. கேடயம் என்ற பொருள் ஒன்று. அதற்குச் சிவப்புப் பக்கம் கறுப்புப் பக்கம் என்ற பகுதிகள் இரண்டு. ஒரு பக்கத்தைமட்டுங் கண்டவனுக்குக் கேடயத்தின் இருபகுதிகளைக் கண்டதனால் கிடைக்கும் முழு அறிவு கைகூடவில்லை. ஒரு பகுதியைக் கண்ட அறிவுப் பகுதியே கிடைத்தது. இரண்டு பகுதிகள் சேர்ந்தாலன்றிக் கேடயம் என்ற முழுப்பொருள் இல்லை. அஃதே போல் இரண்டு பகுதிகளையும் அறிந்த அறிவுப் பகுதிகள் சேர்ந்தாலன்றி முழு கேடயத்தை யறிந்த முழு அறிவு இல்லை.

ஆகவே பொருள் ஒன்றாகவும் முழுமையாகவும் இருக்கிறது. அதன் பகுதிகள் பலவாகவும் தம்முள் வேறுபட்டும் இருக்கின்றன. அஃதேபோல் அப்பொருளை அறியும் அறிவும் ஒன்றாகவும் முழுமையாகவும் இருக்கிறது. அவ்வறிவின் பகுதிகளும் பலவாகவும் தம்முள் வேறுபட்டும் இருக்கின்றன. பொருளின் பல பகுதிகளையும் ஒருங்கு சேர்த்துக் கண்டாலல்லது முழுப் பொருளின் உண்மை புலப்படாது. அஃதே போல் பல அறிவுப் பகுதிகளைச் சேர்த்தாலல்லது முழு அறிவு கிடைக்காது. பொருளின் ஒருபகுதியை முழுப்பொருள் என்று கொள்வது பெரும் பேதமை யாகும். அஃதே போல் அறிவின் ஒரு பகுதியை முழு அறிவாகக் கொள்வதும் பெருங்கேட்டையே விளைக்கும். யானையின் ஒவ்வோர் உறுப்பை மட்டும் தொட்டறிந்த குருடர்கள் கதையாய் முடியும். யானையின் முழு உருவத்தைக் கண்டவனே யானையைக் கண்டவனாவான். முழு உருவத்தைக் காணாது ஒவ்வோர் உறுப்பை மட்டும் தொட்டறிந்த குருடர் யானையை முறமென்றும், தூணென்றும், உலக்கையென்றும் விளக்குமாறென்றுமே கொள்வர். அஃதே போல் அறிவுப்பகுதிகள் பலவற்றையும் ஒருங்கு சேர்த்து உணராதார் ஊனக்கண் பெற்றும் ஞானக்கண் பெறாத குருடர்கள் என்பது வெளிப்படை.

உலகத்தில் எண்ணிறந்த பொருள்களை நாம் காண்கின்றோம். வேறு பல பொருள்களை நேரிற் காணாவிட்டாலும் ஊகித்து அறிகிறோம். எல்லா வழிகளிலும் நாம் அறியக் கூடிய பொருள்களையெல்லாம் சமயநூல் வல்லார்கள் மூன்று பெரும்பாகுபாடுகளாகச் செய்துள்ளார்கள். சுருக்கமாக முப்பொருள் என்றும் கூறுவார்கள். அவை கடவுள், உயிர், உலகம் என்பன. சமயநூல் வழக்கில் பதி, பசு, பாசம் எனப்படும் திரிபதார்த்தங்கள் இவையே.

இம்மூன்று பொருள்களின் இலக்கணங்களையும் அவற்றுள் ஒன்றற்கொன்று கலக்கும் முறை, இலக்கண முதலியவற்றையும் விரித்துக் கூறுவதே சமய நூல்களின் தலையாய நோக்கம். இம்மூன்று பொருள்கள் ஒவ்வொன்றிலும் பற்பல உட்பிரிவுகளும் ஒவ்வொரு உட்பிரிவுக்கும் தனித்த இலக்கணமும் உட்பிரிவுகள் ஒன்றோடொன்று கலக்கும் முறை வகை விரிவுகளும் பலவாக உள்ளன. இவற்றையெல்லாம் பல வேறு வகையாகக் கூறுவதால் சமயங்களும் சமய நூல்களும் பல வேறு வகையாக உள்ளன. வேறு வேறு வகையாகக் கூறப்பட்ட பொருள் ஒன்றே. ஆனால் பொருளை உணராமல் கூறப்பட்ட வேறுபாடுகளை வைத்து நாம் சமயப்போர் செய்கிறோம். இவ்வேறுபாடுகளால் முழுப் பொருளையும் உணர்வது மிகவும் அரிதாயிருக்கிறது. சிவப்பும் கறுப்புமா யுள்ள கேடயத்தைச் சிவப்பே யென்றும் கறுப்பே யென்றும் சாதிப்பது போலிருக்கிறது.

இவ் வேறுபாடுகளினின்றும் உண்மையை யெவ்வாறு அறிவது? காணப்படாத கடவுள், உயிர் இவைகளின் இலக்கண முதலியவற்றைக் காணப்பட்ட உலகத்தின் இலக்கண முதலியவற்றைக் கொண்டு ஒருவாறு அறிந்து தெளியலாம். காணப்பட்ட உலகத்தைப் பற்றிச் சமய நூல்கள் பலவகையாகக் கூறுகின்றன. அவற்றுள் சில அறிவியல் (Science) முடிபுகட்குப்



பொருந்தியும், பல முரண்பட்டும் உள்ளன. சில அறிவியற் பகுதி நூல்கள் பலவற்றின் முடிபுகட்குப் பொருந்தியும், பல முரண்பட்டும் உள்ளன. ஆகவே சமய நூற்கொள்கைகளுள் எவை அறிவியல் முடிபுகட்கும் அறிவியற் பகுதி பலவற்றின் முடிபுகட்கும் எத்துணைப் பொருத்தமாகக் காணப்படுகின்றனவோ அத்துணை அவையே பிறவற்றினும் மேம்பட்டனவாக எல்லா அறிஞரும் கருதுவர்.

ஆகவே சைவ சித்தாந்தக் கொள்கைகள் ஏனைய கொள்கைகளினும் மிகச் சிறந்தன என்று மிக்க ஆர்வத்தோடு வெறும் பேச்சளவில் சைவ நன்மக்கள் கூறுவதாற் பயனென்னை? அக்கொள்கைகளையும் அவற்றின் பல பகுதிகளையும் அறிவியற் பகுதிகளின் பல முடிபுகளோடு ஒப்பிட்டு அவைகள் மிகப் பொருத்தமாக உள்ளனவென்றும் ஏனைய் சமயக் கொள்கைகள் எவ்வளவு பொருத்த மற்றும் முரண்பட்டும் உள்ளனவென்றும் எடுத்து விளக்கினாலன்றிச் சைவத்தின் உயர்வை அறிஞர்களுக்கு எவ்வாறு வெளிப்படையாக உணர்த்தக் கூடும்?

தோத்திரம், சாத்திரம் என்ற நமது சமய நூல்களை அருள் மொழிகள் என்று ஒதுக்கி விட்டால் வேறு எங்கிருந்து நமது சமயக் கொள்கைகளை எடுத்துக் கொள்வதோ அறிகிலேன். அருள் மொழிகளை அருள் துணை கொண்டே யறிய வேண்டு மென்பது உண்மையே. ஆனால் அறிவு வளர வளரத்தான் அன்பு வரும்; அன்பு வளர வளரத்தான் அருள் தோன்றும், என்பதை அருள் வாதிகள் ஒரு நாளும் மறுக்க வியலாது. ஆகவே அறிவைப் பெருக்கி அன்பைப் பெருக்கியே அருளைப்பெற்று அறிய வேண்டும். அறிவு அருளுக்கு அடிப்படைக் கீழ் உள்ள பேரடிப்படை யாகவே நிற்கிறது. அருள் மொழிகளை அருட்டுணை கொண்டும் அறிவினாலேயே அறிய வேண்டியிருக்கிறது. "பத்திநெறிநிலை நின்று நவகண்டபூமிப் பரப்பை வலமாக வந்தும், பரவையிடை மூழ்கியும் நதிகளிடைமூழ்கியும் ... மௌனத்திருந்தும் உயர்மலை நுழைவுபுக்கியும்....அற்பவுடல் கற்பங்கடோறும் நிலைநிற்க வீறு சித்தி செய்தும் ஞானமலது கதி கூடுமோ" என்றார் தாயுமானவரும். மேற்கூறியவை "அவனருளாலே அவன்றாள் வணங்கி" "அவனருளே கண்ணாகக் காணினல்லால், இப்படியன், இந்நிறத்தன்; இவ்வண்ணத்தன், இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்பன போன்ற வாக்குகட்கு எவ்வாற்றானும் முரண்பட்டனவல்ல வென்பதை நுண்ணறிஞர் உணர வேண்டும்.

உலக அறிவியற் பகுதி நூலாராய்ச்சியில் மேல் நாட்டவர் நம்மைவிட மிகச் சிறந்தவர்கள். அவர்கள் முடிபுகளை எண்ணிறந்த அரிய நூல்கள் வாயிலாக வெளியிட்டுள்ளார்கள். அவைகளைக் கற்று அம்முடிபுகளைச் சைவக்கொள்கைகளோடு ஒப்பிட்டு இரண்டுக்கும் உள்ள பொருத்தத்தைக் கண்டு பிறருக்கும் விளக்குவதே ஆங்கிலம் கற்ற சைவர்களின் முதற் கடன். அவ்விளக்கத்தை எளிய நூல் நடையில் எழுதி ஆங்கிலங் கல்லாத சைவ நன்மக்கள் உணருமாறு தமிழில் வெளியிடுவதே அன்னார் சைவத்துக்கு உதவ முன்னிற்கும் பெரும்பணி.

சில நாட்கள் முன்னர் மக்டூகல் என்ற தத்துவ நூலாசிரியர் எழுதிய "மக்கட் கூட்டமன நூல்" (Mc Dougall's

Social Psychology) என்ற நூலைப் படித்தேன். அதிற்கண்ட பல முடிபுகள் சைவசித்தாந்தக் கொள்கைகட்கு மிகப் பொருத்தமாக இருப்பதை உணரும் போதெல்லாம் அளவற்ற உவகை எய்தினேன். ஆணவமலம் உயிரில் செம்பிற் களிம்பு போன்று ஞானிகளிடத்தும் "மாயாதே தன் சக்தி மாய்ந்து" இருக்கிறதென்பது சைவ சித்தாந்தக் கொள்கை. மக்டூகல் நூலில் "instinct of self - assertion" (தன் வலியுறுத்தும் இயற்கையறிவு) என்ற பகுதியை உணர உணர சைவக்கொள்கை இவ்வறிவியற் பகுதிக்கு எவ்வளவு அதிகப் பொருத்தமுடையதாயிருக்கிறதென்று எவரும் அறியக் கூடும். அஃதேபோல் வேறு சில பகுதிகளை யுணர யுணரச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிகளின் சிறப்பு, பெண்ணின் பெருமை, பெண்மையினின்றும் தாய்மையும் அதினின்று இறைமையும் தோன்றும் முறை, அன்பு அருள் இவைகளின் இலக்கணம், சாமம் தானம் பேதம் தண்டம் என்ற முறையின் உட்கருத்து, உயிர்ப்பணியின் பெருமை, சமயத்துக்கு அஃது அடிப்படையாகும் முறை முதலிய எண்ணிறந்த கொள்கைகளில் அழுந்தியிருக்கும் உண்மைகள் வெளிப்படுகின்றன. அந்நூலையும் அத்தகைய அரிய நூல்களையும் ஒவ்வொரு சைவரும் படிக்க வேண்டுகிறேன்.

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டால் நாம் காணக் கூடிய முடிவான உண்மை ஒன்றே. சைவசித்தாந்தம் தொகை, மேல் நாட்டு அறிவியல் விரிவு. அவ்வறிவியலில் விரிவாகக் கூறப்பட்ட உண்மைகளனைத்தும் சைவ சித்தாந்தத்தில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. இவ்வுண்மையை யறிவதே அறியும் அறிவு. இவ்வாராய்ச்சி பெருநலன் விளைக்குமென்பதைக் கூறவும் வேண்டுமோ? ஏனெனில் தொகுத்துக் கூறப்பட்ட உண்மைகள் எளிதில் புலப்படா. கூர்த்த அறிவும் அநுபவமும் உடைய அறிஞருக்கே புலனாகும். விரிவாகக் கூறப்பட்ட உண்மைகளோ பெரும்பான்மையோருக்கு நன்கு புலப்படும். விவரமாகக் காரணங்களைச் சொல்லிக் காரிய நிகழ்ச்சிகளை விளக்குவதால் யாவரும் உண்மையென்று அறிவதோடு தங்கள் அநுபவத்திலும் அவ்வுண்மைகளைப் பொருத்தச் செய்யலாம். ஆகவே விரிவான உண்மைகளை விளக்கி அவைகள் சைவ சித்தாந்தத்தில் எவ்வாறு தொகுத்துக் கூறப்பட்டுள்ளன என்பதை விளக்குவது சைவ நன்மக்கட்குப் பெருநலன் விளைக்குமென்பதை எவரும் மறுக்க இயலாது.

ஆனால் ஆராய்ச்சி முறையைக் கொள்வோர் முக்கியமாக ஓர் எச்சரிக்கையைக் கவனிக்க வேண்டும். அறிவியற் பகுதி நூல் முடிபுகள் சில நிலையாக நிற்பதில்லை. (Not stationary, but changing) மாறிவருகின்றன. உதாரணமாகப் பொருள் ஆக்கத்தைப் பற்றி (Molecular theory, atomic theory, electronic theory, theory of relativity) பல முடிபுகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்துள்ளன. வரலாற்று நூலிலும் புதிய கல்வெட்டுகளும், நாணயங்கள், செப்பேடுகள் முதலியவைகளும் கிடைக்கக் கிடைக்க முடிபுகளும் மாறி வருகின்றன. ஆகவே ஏதோ ஒரு முடிபையே முடிந்த முடிபாகக் கொண்டு பெரிய மனக் கோட்டை கட்டிவிடுதல் கூடாது. முடிபுகள் மாறிக்கொண்டே வருமின்



செயல்களிலும், நமது ஆஸ்திகக் கொள்கையும், ஆன்ம உயர்விலுள்ள ஊக்கமுமாகிய இரண்டும் காணாமலிருப்பின், நாம், நாஸ்திகர்கள் தேகாத்ம வாதிகள் ஆகியவர்களை விடக் கீழான நிலையிலேயே இருப்பவர்களாகக் கருதுதல் வேண்டுமென்பதை அறிஞர்கள் ஒப்புக் கொள்ளாமலிருக்க முடியாது.

ஆதலால், நாம் நமது தேகத்தை வளர்ப்பதற்கு வேண்டிய உணவைச் சம்பாதிக்கும் முறையிலும், அதைப் பாகுபடுத்தி உட்கொள்ளும் முறையிலும், தேகாரோக்கியத்திற்காகச் செய்யும் தேகப்பயிற்சி முறையிலும் நமது கொள்கைகளுக்குத் தக்கவாறு நாம் நடத்தல் வேண்டும். அங்ஙனம் நடக்கத் தவறுவோமாயின், படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன்கோயில் என்னும் பழமொழி நமக்கு முற்றும் பொருந்தியதாகும்.

" அன்பே சிவம் " என்று திருமூலர் சொல்லிய திருவாக்கு நமது மனக்கண் முன்பாகச் சதா நிற்கவேண்டிய மொழியாகும். நாம் நமது தேகத்தாலோ அன்றி மனத்தாலோ செய்யப் புகும் செயல்கள் சரியாவென்று பார்ப்பதற்கு அதுவே உரைகல்லாகும்.

அன்பின் வழியே செல்ல முயற்சி செய்கின்றவர்கட்குச் சாதாரண உலகத்தில் மயக்கத்தை யுண்டுபண்ணும் சுகங்களைப் பற்றி மாத்திரம் கவனித்தால் இடையூறுகள் அநேகம் தோன்றும். சிவத்தின் தன்மையை நமது ஆன்மா மேலும் மேலும் அடைய வேண்டு மென்கிற நோக்கம் நமக்கு உண்மையாகவிருந்தால், மேற்சொன்ன இடையூறுகள், நம்மால் ஜெயிக்கப்பட்டு அநுகூலங்களாக மாற்றப்படுமேயல்லாது நம்மைப் பின் வாங்கச் செய்யும் இடையூறுகளாகவே இருக்க மாட்டா. ஆகையால் உணவைப்பற்றியும் ஆலோசிக்கும்போது, போலிச் சுகத்தைப்பற்றிய உணவும், தேகாரோக்கியமும், ஆன்ம உயர்வும் பெறுதற்கு அநுகூலமான உணவும் வெவ்வேறு தன்மையுடையன வென்பது புலப்படும்.

அதன் பின்னர், நாம் கவனிக்கவேண்டியது யாதெனில், இரண்டாவது வகையான உணவையே நாம் அகத்தியம் உட்கொள்ள வேண்டுமென்பதேயாம். மக்களில் சிலர் பிறபிராணிகளைத் துன்புறுத்தி அவற்றின் உயிர் நீங்கிய பிறகு பிரேதங்களை யுட்கொள்கின்றனர் ! அவ்வாறு புலால் உண்ணுதல் தேகத்துக்கும் ஆன்மாவுக்கும் தீங்கு விளைவிக்குமென்பதை அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியாலும் அநுபவத்தாலும் கண்டறிந்திருக்கின்றார்கள்.

கொல்லப்பட்ட பிராணிகளுக்கு, எளிதில் புலப்படா வியாதிகள் இருந்திருக்கலாம். அவற்றின் புலாலை மக்கள் உண்ணுவதால் உண்பவர்கட்கும் அவ்வியாதிகள் வருவதற்கு இடமுண்டாகிறது. சுகதுக்க உணர்ச்சியுள்ள பிராணிகள் கொல்லப்படுங்கால், அவைகட்கு உண்டாகும் அவஸ்தை உணர்ச்சியின் பயனாக அந்த மாமிசமும் விஷத்தன்மை யடைகிறதென்னும் உண்மையை இக்காலத்தில் மேனாட்டு சாஸ்திரிகளும் வெளியிட்டிருக்கிறார்கள்.

புலால் உண்பதனால் அவற்றில் அடங்கிக் கிடக்கும் சில ஆகார அம்சங்கள், உண்பவர்கட்கு மிகையாகின்றன. அதுபற்றியே, ஒரு தீமையைப் போக்கப் பல தீமைகள் தேடுவது போன்று, மதுபானம் முதலிய மயக்கப் பொருட்களை யுட்கொள்ளச் சிலருக்கு இச்சையுண்டாகிறதென்று தெரிகிறது.

றன. ஆகவே ஆராய்ச்சி முறையிற் சென்று இடர்ப்படுதல் கூடாது என்று விலகிநிற்றலும் கூடாது. முடிபுகள் பலவற்றுள்ளும் மிகப் பொருத்தமானவை (consistent) எவை என்பதை நன்காராய்ந்து அவைகளைச் சைவ முடிபுகளோடு ஒப்பிட்டு விளக்குவதே உயர்தர ஆராய்ச்சியாகும்.

இவ்வாறு செய்யும் ஆராய்ச்சி முறையில் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். கருத்து வேறுபாடுகளை ஆராய்ந்து உண்மையைக் கடைப்பிடித்து விளக்குவதே மேன்மை. அதை விடுத்துக் கருத்து வேறுபாடுகளை ஆராயாமல் அவ்வேறுபாடுடையார்களைப் பலவாறு இழித்துக் கூறுவதோடு அவர்களை வைதும் அவர்கள் கூறுதனவற்றைக் கூறியதாகப் புரட்டுச் சொல்லியும் வருதல் சிற்சில அறிஞர்கள் 'திருத்தொண்டாக' விருக்கிறது. அன்னாரை அறிஞரென்றும் சைவரென்றும் கூடச் சொல்வது பிழையாகும். பெரிய கழகங்கள் உயரிய நிலையினின்றும் குலைந்து அழிவதும் சைவ சமயம் மிகத் தாழ்ந்த நிலையில் இருப்பதும் அத்தகையோர் இயற்றும் 'திருத்தொண்டின்' முழுப் பயனே. அன்னாரைச் சமய உட்பகைவர் (Traitors) எனக் கூறுவதும் மிகையாமோ? அத்தகையோர் பலரை மூன்று கண்ணுள்ள முழுமுதற் கடவுள் மறுமையிலன்றி இம்மையிலே தண்டித்து வருகிறார் என்பது காண்போர்க்குக் கண்கூடு.

இக் கட்டுரையின் முடிபுகளைத் தொகுத்துக் கூறின்,

(1) சைவத்தைப் பரப்புதற்கு ஆராய்ச்சி முறை இன்றியமையாத பெருங் கருவி (2) அம்முறைபற்றி அறிவியற் பகுதி முடிபுகளைச் சைவ முடிபுகளிற் பொருத்திக் காட்டுவது சைவர்கள் செய்ய வேண்டிய கடமைகளுள் தலையாயது (3) அம்முறையில் வரக்கூடிய சில இடர்களைத் தவிர்த்தல் வேண்டும் (4) அம்முறைக்குதவியாகப் பல மேல்நாட்டு அறிவியல் நூல்களைத் தமிழில் வெளியிடல் வேண்டும் (5) அம்முறையில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை இகழ்ந்து கூறுதல் பெருங் கேட்டை விளைக்கும் என்பனவே.

M. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B.A., B.L.

# ஆன்ம வாழ்க்கையும் புலால் மறுத்தலும்

உலகத்தில் நமது வாழ்க்கை சம்பந்தமான எவ்விஷயங்களைப் பற்றியும் ஆலோசிக்கும்போது கடவுள் ஒருவர் உளர் என்னும் உண்மையையும் ஆன்ம உண்மையையும் அறிந்தவர்கட்கும் அறியாதவர்கட்கும் தோன்றும் நோக்கங்களும் முறைகளும் வெவ்வேறாக இருக்கும். இப்பத்திரிகையை வாசிப்பவர்கள் பெரும்பாலோரும் ஆஸ்திகர்களாகவும் ஆன்ம விருத்தியில் ஊக்கம் உள்ளவர்களாகவுமே இருப்பார்களென்பது திண்ணம்.

மனத்தின்கண் எழும் எண்ணங்களிலும் வாயினின்று வரும் வார்த்தைகளிலும், உடலால் புரியும் பல வகையான



மற்றும், 'சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதல் வேண்டு'மென்னும் முது மொழிக்கேற்ப, நாம் நமது தேகத்தை ஒழுங்காக வைத்துக்கொண்டுதான் நமது அறிவையும் அன்பையும் வளர்த்து ஆன்ம வுயர்வடைய வேண்டியவர்களாக விருக்கின்றோம்.

சரியான தேகாரோக்கியம், புலால் உணவால் உண்டாகாதென்பதற்கு மேற்சொன்ன விஷயங்களைத் தவிர இன்னும் எத்தனையோ காரணங்களையும், அநேக விவரங்களையும் எடுத்துச்சொல்லக்கூடும். ஆனால், இந்த வியாசத்தில் அவ்விஷயங்களைச் சுருக்கமாகத்தான் சொல்லி வேண்டியிருக்கிறது.

நாம் இப்போது முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம், புலால் உண்ணுதல் ஆன்ம விருத்திக்கு முற்றிலும் விரோதமென்பதே யாம்.

பிறர் (பிராணிகளைக்) கொல்லுந் தொழிலைச்செய்து புலாலை அனுப்பிவிட்டால், புலால் உண்பவர் கொலைப் பாவத்திற்கு உட்பட்டவர்களல்லர் என்றும் உண்ணும் பாவம்தான் தங்களைச் சாருமென்றும் சிலர் கூறுகின்றனர். அது சரியன்று. ஏனெனில், உண்பவர்களில்லையானால், கொல்பவர்களிருக்க மாட்டார்கள். ஆகவே, கொல்பவர்கள் செய்யும் இரக்கமற்ற கொடும்பாவச் செயலும், கொலைச் செயலுக்குக் காரணராயிருக்கும் உண்பவர்களைச் சாருமென்பது சொல்லாமலே விளங்கும். ஆதலின், புலால் உண்பவர்களுடைய நடத்தை அன்பின் வழியைப் பற்றினதாகுமா? அன்பைக் கடைப்பிடித்தொழுக விரும்புவோர் மேற்கண்ட கொலைத் தொழிலையும் நடத்தையையும் அறவே ஒழிக்க வேண்டாமா?

தான் அடுத்த நிமிஷத்தில் உயிர் நீங்கவேண்டியிருக்குமென்பதை ஒரு சிறிதும் அறியாத ஓர் ஆடானது, கொலை செய்பவனுடைய கையை அன்புடன் மோந்துகொண்டு நிற்கின்றது. அந்நிலைமையிலிருக்கும் பிராணியைக் கொல்லும்பொழுது அவனுக்கு எவ்வளவு கன்னெஞ்சமிருக்க வேண்டுமென்பதை நினைத்தால் உடல் பதறுகின்றது! மனம் தடுமாறுகின்றது!!

புலால் உண்ணும் ஒருவர் தன் சகோதரனாகிய மற்றொரு மனிதன் அத்தொழிலைச் செய்யும்படியாகத் தானே தூண்டுகிறார்!! அவர் அச்சகோதரனைச் சிவத்தினிடம் போய்ச் சேர உந்தித் தள்ளுகிறாரா? அன்றி நரகத்தில் வீழ்விக்கின்றாரா? என்பதைச் சிறிது யோசித்தால் அவருடைய ஆஸ்திகம் எத்துணை யுண்மையுடையதென்பதை அவருடைய நெஞ்சமே அவருக்கு நன்றாகத் தெரிவிக்கும்.

நம்முடைய நாட்டில் முனிவர்கள் முதலிய பெரியோர்கள் மரக் கறியிலும் மிளகாய் முதலான கடுமையான பதார்த்தங்களை விலக்க வேண்டுமென்று சொல்வதற்கு முக்கிய காரணம் யாதெனில், அதிக காரப் பொருள்கள் உண்பதனால் தேகத்தில் ஒரு கடுப்பு உண்டாகி, அதனால் (மன ஆரோக்கியமும் தேகாரோக்கியமும் ஒருமைப்பட்டிருத்தலால்) உள்ளப் பரிசுத்தத்துக்கு இடையூறு உண்டாகிறதென்பதே யாகும். இதுவே இப்படியிருக்குமானால், மாமிச உணவைப் பற்றிச் சொல்ல வேண்டுமோ! அவ்வுணவு இரக்கம், தயை, பக்தி, பொறுமை, அடக்கம் முதலான தூய குணங்களின் அபிவிருத்திக்கு இடையூறு செய்யுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் விளங்

கும். அமெரிக்கா தேசத்தில் வீடுகளில் வளர்க்கும் நாய் முதலிய பிராணிகளுக்கு மரக்கறி பதார்த்தத்தையே சில சமயங் கொடுத்தும் மற்றும் சில காலங்களில் மாமிசத்தையே கொடுத்தும் பலவகையாகப் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறார்கள். அதனால் என்ன தெரிந்துகொண் டிருக்கிறார்க ளென்றால், உணவுக்கு ஏற்றதாகக் குணங்களும் பொருந்துகின்றன வென்பதேயாம். ஆகவே சில விலங்குகளின் மாமிசத்தை உட்கொள்ளுவதால், அவற்றின் குணத் தன்மையை ஒரு சிறிதாவது மனிதர்கள் அடைதல் கூடும்.

உதாரணமாக ஒன்று கூறுவோம். வெறிபிடித்த நாய் ஒன்று மனிதன் ஒருவனைக் கடித்துவிடுமானால், அதன் வெறிக்குணம் அம்மனிதனுக்கும் உண்டாவதைக் காண்கின்றோம்; இதற்கும் சாதாரண மாமிச உணவின் மூலம் பிராணிகளிலிருந்து மனிதர்களுக்குத் தோற்றும் தீமைகளுக்கும், அளவில் வித்தியாசமே யன்றி, தன்மையில் ஒன்றே.

இதுகாறும் கூறிய வாற்றால், தேகாரோக்கியம் சம்பந்தமாகவும் குணநிசயம் சம்பந்தமாகவும், புலாலுண்பவர்கட்குச் சம்பவிக்கும் கெடுதிகள் ஒருவாறு விளக்கிக் காட்டப்பட்டன. மேலும், மற்றொரு முக்கியமான நோக்கத்துடனும் இவ்விஷயம் இன்னும் ஆராய்ச்சி செய்யத்தக்கது.

சயநல நோக்கத்துடன் கவனிக்கும் போது, மனிதர்கட்கு மாமிச உணவால் நன்மையே தவிரக் கெடுதி ஒன்றுமில்லையென்று இவ்வாராய்ச்சியின் பொருட்டு வைத்துக் கொள்ளுவோம். அப்படியானாலும் மனிதர்கள் புலாலுண்ணுதல் சரியென்று கொள்ளலாமா? அதற்காகக் கொல்லப்படும் பிராணிகளின் சுக துக்க வாயிலாக மனிதர்கள் அவ்விஷயத்தை ஊன்றிக் கவனிக்க வேண்டியதில்லையா? ஈசுவரனுடைய கூறு முறையில் செடி கொடிகள் மரங்கள் முதலியவை, சாதாரணமாய் நாம் உயிருள்ளவை யென்று சொல்லுகிற பிராணிகளாகவும், பின்னர் அப்பிராணிகள் படிப்படியாய் மேனிலையடைந்து மானுடஜன்மத்தை யடைகின்றன வென்பது இந்துமத சாஸ்திரங்களின் வாயிலாக நாம் அறிகின்றோம். அஃதன்றியும், இயற்கையை ஊன்றி ஆராய்ச்சி செய்வதாலும் மேனாட்டில் விகாச முறையை விளக்கிக் காட்டிப் பெரியார்கள் இயற்றியிருக்கும் நூல்களாலும் நமக்கு இவ்விஷயம் நன்கு தெரிகிறது. ஆதலின் பிராணிகள் செல்லும் கூறுமுறையின் குறுக்கே மனிதர்கள் நின்று அவைகளைக் கொன்று தங்களுடைய ஊனை வளர்க்க முயற்சித்தல் கடவுள் சட்டத்துக்குப் பொருந்தியதாகுமா? இக்கேள்விக்கு அறிவாளர் எல்லாரும் ஒரே மனதாய் எதிரடையான மறுமொழிதான் கூறுவர்.

மேலும், சுகதுக்க உணர்ச்சியுள்ள பிராணிகளைக் கொன்று அவைகளுக்குத் துக்கம் உண்டுபண்ணுதல் பெரும் பாவமன்றோ? ஒரு மாட்டுக்கு அல்லது ஓர் ஆட்டுக்கு அதனுடைய குழந்தையின்பால் எவ்வளவோ அன்பு இருக்கின்றது. அவைகளைப் பிரித்து ஒன்றையோ அன்றி இரண்டையுமோ கொல்லுதல், அன்பில் (சிவத்தில்) நோக்கமுள்ள ஆஸ்திக பக்தர்களுக்கு (எல்லா மனிதர்களும் தொழும் கடவுள் ஒருவரேயாவர்; அவரைத் தான் சிவம் என்ற பெயரால் குறிக்கின்றோம்.) முறையாகுமா?

பிற பிராணிகளுக்கு அனாவசியமாகத் துன்பம் விளைக்கத் துணிபவர்களைப் பக்தி, நல்லொழுக்கம், ஞானம் ஆகிய சீரிய மனித இலக்கணங்களில் ஈடுபட்டவர்களாகக் கருதுதல் கூடுமா? உலகத்தில் அநேக தொழில்களில் அமர்ந்திருப்பவர்களாகிய சாதாரண மனிதர்கள் தங்கள் இல்லற வாழ்க்கையில் பிறருக்கு அணுவளவும் துன்பம் செய்யாம லிருத்தல் கூடாம லிருக்கலாம். அதற்காகத்தான் மேலே அனாவசியமாக என்ற வார்த்தை உபயோகிக்கப் பட்டிருக்கிறது. நாம் பிறருக்கு இழைக்க நேரிடும் துன்பச் செயல் எவ்வளவுக் கெவ்வளவு குறைவுபட்டு அன்பின் வழியே பிறருக்குச் செய்யும் இன்பச் செயல் எத்துணை அதிகரிக்கின்றதோ அத்துணை நமது நாஸ்திகம் குறைவுபட்டு ஈசனுக்கு நெருக்கமாக நாம் உயர்ந்து கொண்டே செல்வோமென்பது திண்ணம்.

“ கொல்லான்புலால்மறுத்தானைக்கைகூப்பி
எல்லா உயிருந் தொழும் ”

என்னும் திருவள்ளுவர் திருவாக்கை இங்கு ஞாபக மூட்டி இவ்வியாசத்தை முடிக்கின்றேன்.

C. S. சாமிநாத முதலியார், B. A.,
*Acting Commissioner, Religious Endowment Board.*



# திருப்பணி வேலையில் விளையுஞ் சில தீங்குகள்

“ கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் ” என்னும் ஆன்றோர் ஆணையை இந்து உலகம் இன்றளவும் போற்றி வந்துள்ளது. “ திருக்கோயில் இல்லாத திருவில் ” ஊரில் ஓர் ஆலயம் அமைத்தல் பெரும் பதிபுண்ணியச் செயலாம் என்று சைவசாத்திரம் சாற்றும். நிலைகுலைந்து கிடக்கும் பண்டைக் கோயில்களைச் சீர்ப்படுத்தி அமைத்தல் அதனினும் சிறந்த தென்ப. இப்படித் திருக்கோயில் அமைக்கும் பணியைத் “ திருப்பணி ” என்று சிறப்பு வகையில் குறிப்பது பெருவழக்கா யுள்ளது.

இத்துணைப் பெருமை வாய்ந்த அறச் செயலில் சில தீங்குகளும் விளைகின்றன என்று அறியவோ, அறிந்து வெளியிடவோ, அன்பர்கட்கு இயல்பில் விருப்ப மெழாது. ஆயினும் இக்காலத்தில் நடைபெறும் சிவாலயத் திருப்பணி வேலைகளில் சில தீங்குகள் நிகழ்ந்துவிட்டதும், நிகழ்ந்து வருவதும் உண்மை. அரிதில் தேடிய பொருளை ஆண்டவன் மீது வைத்த அன்பால் ஆலயங் கட்டலிற் செலவிடுவோர், வேண்டுமென்றே தீங்கிழைக்க மாட்டார்கள். எனினும், மனம்போன போக்கெல்லாம் போக மன்பதையைத் தூண்டும் காலவேகமும், அறிவாராய்ச்சிக் குறைவும் இக்காலச் சைவமக்கட்குத் தக்க சமயத் தலைவர் இல்லாமையும் ஒன்று கூடித் திருப்பணி என்னும் அமிழ்தத்தில் தீங்காம் நஞ்சைக் கலந்துவிட்டன.

அத்தீங்குகளுள் சிலமட்டும் ஈண்டெடுத்துக் காட்டப்படும்: (I) சிவாலயங்கள் யாவும் சிவாகம விதிப்படி கட்டப்பட்டவை. அவைகளின் கோபுரங்கள், மதில்கள், பிராகாரங்கள், கர்ப்பக்கிருகம், அந்தராளம், மகாமண்டபம் முதலிய கட்டட உட்பகுதி யமைப்புக்கள், ஆங்காங்குக் காணப்படும் மூர்த்தி

இருக்குகள் முதலியன வெல்லாம் ஆழ்ந்த உட்பொருள்களைக் குறிப்பன என்று ஆன்றோர் கூறுகின்றனர். எனவே, நம் கோயில்கள் நாம் கடவுளை வணங்குதற் கேற்பட்ட ஏதோ ஒரு வகைத் தூய இடங்கள் என்ற அளவின் நில்லாது, அண்டபிண்ட தத்துவங்களையும், சிவயோக அநுபவ மறைபொருள்களையும் அவற்றில் அறிவோடு வழிபடுவோர்க்குப் புலப்படுத்துவனவாயுள்ளன வென்பது பெறப்படும். இவற்றின் உண்மைகளைச் சிற்ப நூலும் ஆகம நூலும் வல்லார்வாய்க் கேட்டுணர வேண்டும்.

இம்மாண்பினை உணராது, சிவாலயத் திருப்பணி செய்வோர் சிலர் பண்டைக் கோயில்களின் மூலத்தானம் முதலிய சில அமைப்புகளின் அளவுகளையும் இயல்பையும் மாற்றி விடுகின்றார்கள் என்னும் அலர் மொழி பன்முறை கேட்கப்படுகிறது. இது எம்மட்டில் மெய் என்பதைப் பொதுவாய்ச் சைவ நன்மக்கள் அனைவரும் சிறப்பாய்த் திருப்பணி செய்யும் சிவநேசச் செல்வரும் கருத்தூன்றி ஆராய்ந்து உண்மை தெளிய வேண்டும். இத்தகைய மாறுதல் நிகழ்ந்திருப்பது மெய்யாயின், அது கண்டிக்கத்தக்க தவறேயாம். திருப்பணிச்செல்வர் இனிமேலேனும் அத்தகைய தவறு நேர இடந்தரல் கூடாதென்னும் கருத்தோடு, இங்ஙன மாறுதலின் குறைபாட்டை ஓர் எடுத்துக்காட்டின் வாயிலாகச் சிறிது விளக்கலாம்.

பண்டை ஆலயங்களில் சிவலிங்கப் பெருமான் எழுந்தருளியிருக்கும் மூலத்தானம் பெரும்பாலும் நெருக்கமாயும், இருட்டாயும், [illegible] இன்றியும் இருப்பதுண்மை. இதைக் குறையெனக் கொண்டு, திருப்பணி நடத்துவோர் சிலர் மூலத்தானத்தைச் சற்று விசாலப்படுத்தியோ அல்லது, வேறு உபாயஞ் செய்தோ அதில் காற்றும் வெளிச்சமும் நன்றாய் உலவுமாறு, கட்டடம் அமைத்து விடுகின்றனரென்று கேள்வியுறுகிறோம். இம்மாறுதல் விரும்பத்தக்க தன்று. வெளிச்சமும் காற்றும் மக்கள் வாழ்விற்கு வேண்டப்படுவன என்று யாவரும் அறிவர். இதைப் பண்டை நாளில் ஆலயங் கட்டிய அரசரும் முனிவரும் அறிந்திலர் என்று கொள்ளல் அறியாமையாம். அங்ஙனமாயின், நம்முன்னோர் ஏன் இப்படிக் கருப்பக் கிருகத்தை இடநெருக்கமுடையதாயும் இருட்டு மலிந்ததாயும் அமைத்தனர்? இங்ஙனஞ் செய்தோர் இந்நாட்டார் மட்டு மல்லர். பண்டை எகுபதியரும் யூதரும் இவ்வாறே தத்தம் ஆலயங்களின் முக்கிய இடத்தை நெருக்கமாகவும் இருட்டாகவும் வைத்திருந்தனர். அங்கு ஆண்டவன் விளக்கம் சிறந்து காண்டலால், வழிபட வருவோர் அனைவரும் அங்குப் போதற்குரியர் அல்லர் என்பதும், நோன்பால் தூய்மை யடைந்த மூதறிஞரே அங்குப் பெரும் பயபத்தியோடு சென்று சிறிது நேரமிருந்து ஆண்டவன் திருவுள்ளக் குறிப்பை யுணர்ந்து விரைவில் திரும்பிவிடற் குரியர் என்பதும் அவர்கள் கோட்பாடு. இது நந்நாட்டுக் கோயிலின் தத்துவத்திற்குப் பொருத்தமுடையதே. நமது சிவாலயங்கள் மக்கள் உடம்பையும் அதனுள் உறையும் உயிரையும் நிகர்க்க அமைக்கப்பட்டுள்ளன.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே"

என்னுந் திருமூல நாயனார் திருவாக்கை உன்னுக. (தொடரும்)

ச. சச்சிதாநந்தம் பிள்ளை, B.A., L.T.

சென்னை-600 002.
187/16

## 1927-வருட சமாஜ நிர்வாக சபையினர் (சென்னை)

### தலைவர்

1. திவான்பஹதூர் P. சுப்பையா முதலியார், B.A., B.L., மாஜி ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜ்.

### உபதலைவர்கள்

2. திரு. T. நல்லசிவன் பிள்ளை, B.A., B.L., ஹைகோர்ட் வக்கீல், மயிலாப்பூர், சென்னை.
3. திரு. P. S. ஐயா முதலியார், புரொப்ரைடர் 'எல்பின்ஸ்டன் கம்பெனி', சென்னை.

### காரியதரிசிகள்

4. திரு. ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B.A., B L., ஹைகோர்ட் வக்கீல். சென்னை.
5. திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார், தமிழாசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

### பொக்கிஷதார்

6. திரு. C. இரத்தின முதலியார், காரஸ்பாண்டென்சு செக்ஷன், G. P. O. சென்னை.

### கணித பரிசோதகர்

7. திரு. T. N. தங்கவேலு முதலியார், அக்கவுண்டென்டு ஜெனரல் ஆபீசு, சென்னை.

### அங்கத்தவர்கள்

8. திரு. வி. உலகநாத முதலியார், 'நவசக்தி' ஆபீசு, இராயப்பேட்டை.
9. திரு. பாலி. சு. நெல்லையப்பர், 'லோகோபகாரி' ஆசிரியர், சென்னை.
10. திரு. C. இராஜரத்தின முதலியார், 'ஐ. ஜி. ஆப் போலீசு', ஆபீசு, சென்னை.
11. திரு. மயிலை. சிவ. முத்துக்குமாரசாமி முதலியார், தமிழாசிரியர், முத்தியாலுப் பேட்டை, ஹைஸ்கூல், சென்னை.
12. திரு. பா. கண்ணப்ப முதலியார், P.W. D. ஆபீசு, சென்னை.
13. திரு. K. நாராயணசாமி முதலியார், டிப்டி ரெஜிஸ்ட்ரார், கோவாபரேடிவ் சொஸை யடீஸ், சென்னை.
14. திரு. A. C. பாலசுந்தர நாயகர், B.A., L.T., ஆசிரியர், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.
15. திரு. M. ஷண்முகசுந்தர முதலியார், M.A., L.T., ஷை ஷை
16. திரு. பாலசுந்தர முதலியார், ஸோல்டன் கம்பெனி, திருவல்லிக்கேணி.
17. திரு. S. கண்ணுசாமிப் பிள்ளை, P. M. G. ஆபீசு, சென்னை.
18. திரு. A. சோமசுந்தரஞ் செட்டியார், ருக்மணிருக்கர் கம்பெனி, சென்னை.
19. திரு. A. T. வேலு முதலியார், வர்த்தகர், சென்னை.
20. திரு. S. தர்மலிங்க நாயகர், தலைமை ஆசிரியர், கார்பொரேஷன் ஸ்கூல், சென்னை.

**வெளியூர் நிர்வாக சபையினர் பெயர்கள் அடுத்த இதழில் வெளிவரும்.**

## சமாஜக்கூட்டம் நடந்த இடங்களும் தலைவர்களும்

1. 1906-ல் சிதம்பரம் - Sir P. இராமநாதன் அவர்கள்.
2. 1907-ல் ஷை திரு. பாண்டித்துரைத் தேவரவர்கள்.
3. 1908-ல் நாகப்பட்டணம் - திரு. J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள்.
4. 1909-ல் திரிசிராப்பள்ளி - திரு. கனகசபைப் பிள்ளையவர்கள்.
5. 1910-ல் இராமநாதபுரம் - Sir K. P. புட்டண்ண செட்டியாரவர்கள்.
6. 1911-ல் சென்னை - திரு. J. M. நல்லசாமிப் பிள்ளையவர்கள்.
7. 1912-ல் காஞ்சீபுரம் - திரு. T. பொன்னம்பலப் பிள்ளையவர்கள்.
8. 1913-ல் வேலூர் - ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிக
9. 1914-ல் கடலூர் ,, ,,
10. 1915-ல் தஞ்சாவூர் - ஸ்ரீமத் அம்பலவாண நாவலரவர்கள்.
11. 1916-ல் திருமயிலாப்பூர் - திரு. S. சபாரத்தின முதலியாரவர்கள்.
12. 1917-ல் செம்பியம் - சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரரவர்கள்.
13. 1918-ல் கும்பகோணம் - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள்.
14. 1919-ல் திருப்பனந்தாள் - ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்க சுவாமிகள்.
15. 1920-ல் மாயவரம் - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதரவர்கள்.
16. 1921-ல் மஹாமஹம் - கும்பகோணம் ,,
    மார்கழி - சென்னை ராவ் பஹதூர் - திரு. P.M. சிவஞான முதலியாரவர்கள்.
17. 1922-ல் சென்னை - Sir P. இராமநாதன் அவர்கள்.
18. 1923-ல் ,, திவான் பஹதூர் திரு. P. சுப்பையா முதலியாரவர்கள்.
19. 1924-ல் திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.
20. 1925-ல் சென்னை - Sir P. இராமநாதன் அவர்கள்.
    ,, ,, ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்.
21. 1926-ல் ,, திரு. P. சுப்பையா முதலியாரவர்கள்.
22. 1927-ல் ,, (ஜூலை) ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.
    புதுவை - (டிசம்பர்) ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்.

---

'ஆதி வாழிய அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே.'

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah. Edited and Published by Mani Thirunavukkarasu Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam.